# திருமலைத்தீபம்

**Thirumalaitheepam**

தீபம் – 75 | November - 2021 | Email : theepamlink@gmail.com | TP: 026 2221022/ 026 2054362 | Rs. 30/=




# ஆயரின் செய்தி!

## கிறிஸ்துவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

## கிறிஸ்துவில் இனிய வாழ்த்துக்கள்!

இக்காலத்தில் உலகளாவிய திருஅவையில் பேச்சுப் பொருளாக இருப்பது ஆயர்கள் மாமன்றமாகும். இதுபற்றிய ஆழமான புரிதல் எல்லோருக்கும் தேவை. ஆயர்கள் மாமன்றத்தை (Synod of Bishops) 15.09.1965 இரண்டாம் வத்திக்கான பொதுச்சங்க நிறைவில் திருத்தந்தை 6ம் பவுல் தொடங்கிவைத்தார். வத்திக்கான் பொதுச்சங்கம் எவ்வாறு பிரம்மாண்டமான ஆலோசனை ஒன்றுகூடலாக இருந்ததோ அதேபோல ஆயர்கள் மாமன்றமும் சமய, சமூக, காலத்தின் தேவைக்கேற்பவும் ஓர் இனம், சமூகம், நாடு, சர்வதேசத்தின் தேவைக்கேற்பவும் காலத்திற்குக் காலம் நடாத்தப்பட்டது. தற்போது அறிமுகமாகியுள்ள ஆயர்கள் மாமன்றம் 16வது ஆயர்கள் மாமன்றப் பொது ஒன்றுகூடலாகும். மாமன்றம் என்றால் 'ஒருமித்துப் பயணித்தல்' எனப் பொருள்படும். இதுவே மனித வரலாற்றில் நடைபெறவிருக்கும் பரந்துபட்ட ஆலோசனைக் காலமாக அமையப் போகின்றது. வழமையாக நடைபெற்ற மாமன்றங்களிலிருந்து இது வேறுபடுகின்றது. உலகத் திருஅவையின் சவால்களை எதிர்கொள்ள திருத்தந்தைக்கு ஆலோசனை கூற ஆயர்களும் ஆயர்களுக்கு ஆலோசனை கூற இறைமக்கள் கூட்டமும் உண்டு. தற்போதைய ஆயர்கள் மாமன்றம் 'கூட்டொருங்கியக்க திருஅவைக்கான ஒருங்கிணைப்பு, பங்கேற்பு, திருத்தூதுப் பணி' யை தலைப்பாகக் கொண்டு திருத்தந்தையால் தொடங்கி வைக்கப்பட்டது. இதுபற்றிய மேலதிக விபரங்களை கடந்த திருமலைத் தீபம் இதழிலிருந்து அருட்பணி நவரெட்ணம் கட்டுரையாக எழுதிவருகின்றார்.

இதன் முதல் கட்டமாக தளத் (மறைமாவட்ட) திருஅவைகளில் ஆலோசனைகள் நடைபெறும். கத்தோலிக்கர், கிறிஸ்தவர், பிற மதத்தவர், பல்வகை வயதினர், பல்வகை நிலையினர், பல்வகை தொழில் புரிவோர் என மறைமாவட்டத்தில் அனைவரும் கலந்துரையாடப்பட வேண்டும். இவ்வாறு திரு அவையில் எந்தளவிற்கு ஆலோசனைகள் பெறப்படுகின்றது என்பதை அறியும் காலமாகவும் இது அமையும். இறைவாக்கிற்குச் செவிமடுத்தல், தூய ஆவியானவருக்குச் செவிமடுத்தல், இறைமக்களுக்குச் செவிமடுத்தல் ஆகிய மூன்றும் இப்பயணத்தில் மிக முக்கியமானவை.

ஆயர்கள் மாமன்றம் பற்றிய முழு அறிவை மறைமாவட்டத்தில் அனைவரும் பெற்றிருக்க வேண்டும். இதற்கென தொடக்கத்தில் கருத்தரங்குகள், உரைகள் கலந்துரையாடல்கள் நடைபெறும். இப்பயணத்தில் அனைத்துக் கத்தோலிக்க நம்பிக்கையாளர்களும் ஆர்வத்தோடு பங்கேற்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கற்றுக்கொள்ள, கலந்துரையாட, செவிமடுக்க ஆலோசனைகள் பெறவென வரும் காலங்களில் நாம் எமது மறைமாவட்டத்தில் பல சந்தர்ப்பங்களை உருவாக்குவோம். எமது பயணம் தொடரட்டும்.

இம்மாதம் இறந்த நம்பிக்கையாளர்களை நினைவுகூர்ந்து செபிக்கும் மாதமாகும். இக்காலத்தில் அருட்பணி கிங்ஸ்லி றொபட் அடிகளும் அருட்பணி போல் றொபின்சன் அடிகளும் தம் தாயை இழந்துள்ளனர். அருட்பணி நிதிதாசன் தன் தந்தையை இழந்துள்ளார். அருட்பணி சுகுனேந்திரன் குரூஸ், அருட்பணி மதுராங்கன் குரூஸ் தம் சகோதரரை இழந்துள்ளனர். இவர்களுக்கும் இவர்கள் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து செபத்தில் இணைந்திருப்போம், ஆறுதலாக இருப்போம். கொவிட் தொற்று முழுமையாக நீங்காத நிலையில் விழிப்போடும் பொறுப்போடும் செயல்படுவோம். அவசியமில்லாத சந்திப்புகளையும் ஒன்றுகூடல்களையும் தவிர்த்துக் கொள்வோம்.

இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.

பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்

### 2021ம் ஆண்டிற்கான மறையாசிரியர் தேர்வுகள் I, 2, 3

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாகப் பிற்போடப்பட்ட மறையாசிரியர் தேர்வுகள் (தமிழ்/சிங்களம்) எதிர்வரும் 18.12.2021 (போயா விடுமுறை) அன்று காலை 8.30 மணிமுதல் திருகோணமலை மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. அனுமதிபெற்ற பரீட்சாத்திகள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள கேட்கப்படுகின்றார்கள்.

தகவல்: மறைக்கல்வி நிலையம்

# கிழக்கிலங்கை திருஅவை பெருமையும் பேருவகையும் கொள்கின்றது



**மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக ஆவணி 05, 2021 முதல் உத்தியோகபூர்வமாக தன் பணிகளைப் பொறுப்பேற்றார் நீதியரசர் பாலேந்திரன் சசிமகேந்திரன் அவர்கள்.**

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பாலேந்திரன் சசிமகேந்திரன் அவர்கள் 05.08.2021 ஆம் திகதியன்று தனது சம்பிரதாயபூர்வ உரையை மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆற்றினார். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ள முதற்சந்தர்ப்பம் இதுவாகும். அத்தோடு 22 வருடங்களின் பின்னர் நீதித்துறையில் நீதிபதியாகக் கடமையாற்றிய தமிழர் ஒருவருக்கு மேன்முறையீட்டு நீதியரசராக பதவியுயர்வு கிடைத்த சந்தர்ப்பமும் இதுவே ஆகும்.





திருகோணமலை மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட நீதியரசர் பாலேந்திரன் சசிமகேந்திரன் அவர்கள் மறைந்த மக்கள் வங்கி முகாமையாளர் லக்ஷ்மன் பாலேந்திரன், ஆசிரியை மகேஸ்வரி பாலேந்திரன் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனாவார். பொறியியலாளர் சுரேந்திரன், ஆசிரியை பாலேஸ்வரி தயாளக்குமார் மற்றும் சர்மிளா தனராஜ் ஆகியோரின் சகோதரர் ஆவார். தனது ஆரம்பக்கல்வியை திருகோணமலை மெதடிஸ் கல்லூரியிலும், புனித வளனார் தமிழ்ப் பாடசாலையிலும் இடைநிலைக்கல்வியை குருத்தலாவ சென். தோமஸ் கல்லூரி மற்றும் திருகோணமலை இந்துக்கல்லூரியில் பயின்றதுடன் பாடசாலைக்காலங்களில் விவாத அணியில் தலைவராகவும், கூடைப்பந்தாட்ட அணியின் தலைவராகவும் விளங்கினார். திருகோணமலை மாவட்டத்தின் சாரணருக்குரிய முதனிலை சின்னத்தை முதலில் பெற்ற பெருமையும் இவரையேசாரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16வது பொது அயர்கள் மாமன்ற சாதாரண ஒன்றுகூடல்
## அக்டோபர் 2021 - அக்டோபர் 2023 வரை

### மாமன்றச் சின்னம்




**பெரிய கம்பீரமான மரம்**
விண்ணைத் தொடும் ஞானமும் ஒளியும் நிறைந்த பெரிய கம்பீரமான மரம், அபார வலிமையும் நம்பிக்கையும் கொண்ட கிறிஸ்தவின் சிலுவையைப் பிரதிபலித்துக் காட்டுகிறது.

**கதிரவன் போன்ற வட்டம்**
கதிரவன் போன்று ஒளி உமிழும் நற்கருணையை அது சுமத்து நிற்கிறது.

**மரத்தின் கிளைகள்**
கைகளாக, சிறகுகளாக விரிந்துள்ள அதன் கிளைகள் தூய ஆவியாரைக் குறிக்கின்றன.

**பயணிக்கும் நிலையில் மக்கள்**
இறைமக்கள் தேக்கநிலையில் ஒரே இடத்தில் இல்லாமல், ஒன்றிணைந்த பயணம் என்று பொருள்படும் மாமன்றத்தைக் குறிக்கும் வண்ணம் இணைந்து பயணிக்கின்றனர்.
இந்த வாழ்வின் மரம் தரும் சுவாசத்தால் நிரப்பப்பட்டு, அம் மரத்திலிருந்தே தங்கள் பயணத்தைத் தொடங்குகின்றனர்.

**15 நிழல் உருவங்கள்**
இக்கூட்டுப் பயணத்தில் இடம்பெற்றுள்ள 15 நிழல் உருவங்கள் நம் மனிதத்தின் அனைத்து வாழ்க்கைச் சூழல்களையும், தலைமுறையினரையும் தங்களுக்குள் கொண்டுள்ளன.

**வெவ்வேறு வண்ணங்கள்**
இந்த பண்முகத் தன்மையை வலியுறுத்தும் ஒளிமயமான பல வண்ணங்களே மகிழ்ச்சியின் அடையாளங்களாய் உள்ளன.

**அனைவரும் சமதளத்தில் (ஆயரும் துறவறத்தோரும் மக்களிடையே)**
இளையோர், முதியோர், ஆண்கள், பெண்கள், இளம்பருவத்தினர், குழந்தைகள், பொதுநிலையினர், துறவோர், பெற்றோர், தம்பதியர் மாற்றுத் திறனுடையோர் அனைவருமாக சம தளத்தில் பயணிக்கின்றனர். ஆயரும் துறவோரும் அவர்களின் முன்னிலையில் இல்லாமல், அவர்களுக்கிடையே உள்ளனர்.

### ஆயர் மாமன்ற இறைவேண்டல்



தூய ஆவியாரே!
உமது திருப்பெயரில் கூடியுள்ள நாங்கள்
இதோ உமது திருமுன் நிற்கின்றோம்!

நீர் ஒருவர் மட்டுமே எங்களை வழிநடத்தக்கூடியவர்.
எம் இதயங்களை நீர் வாழும் இல்லங்களாக மாற்றும்.
நாங்கள் எவ்வழியில் பயணிக்க வேண்டும் என்பதையும்
அவ்வழியில் எவ்வாறு தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்பதையும்
எங்களுக்குக் கற்றுத் தாரும்.

நாங்கள் வலுவற்றவர்கள், குற்றமுள்ளவர்கள்.
ஒழுங்கின்மையை ஏற்படுத்தாதவாறு எங்களைக் காத்தருளும்
எங்கள் அறியாமையால் தவறான வழிகளில் செல்லாதவாறும்
பாகுபாடுகள் எங்கள் செயல்களை மேற்கொள்ளாதவாறும்
தொடர்ந்து காத்தருளும்.

உம்மிலே எம் ஒற்றுமையைக் கண்டு
உண்மையானதும், சரியானதுமான பாதையிலிருந்து விலகாமல்,
நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்த
நிலைவாழ்வை நோக்கிப் பயணிப்போமாக.

இந்த எங்கள் மன்றாட்டுக்களை எல்லாம்
தந்தையாம் இறைவனோடும் திருமகனாம் இயேசுவோடும்
என்றென்றும் ஒன்றிணைந்து, எந்நாளும் எவ்விடத்திலும் செலாற்றும்
உம்மை நோக்கி மன்றாடுகின்றோம்.

### திருகோணமலை மறைமாவட்டத்தில், "ஆயர்கள் மாமன்றம் ஓர் அறிமுகம்"

18.11.2021 - மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள், துறவிகளுக்கான அறிமுகம்
27.11.2021 - நிலாவெளி மறைக்கோட்ட பங்குகளுக்கான அறிமுகம்
04.12.2021 - திருகோணமலை மறைக்கோட்ட பங்குகளுக்கான அறிமுகம்
11.12.2021 - மூதூர் மறைக்கோட்ட பங்குகளுக்கான அறிமுகம்



**ஆயர்கள் மாமன்றத்திற்கான முன்தயாரிப்பாக, வத்திக்கானின் ஆயர்கள் மாமன்ற அரங்கத்தில் கடந்த 09.10.2021 இத்தாலி நேரம் காலை 9 மணிக்குத் துவங்கிய இறைவேண்டலுக்குப் பின் தன் சிந்தனைகளை வழங்கிய திருத்தந்தை, மனித சமுதாயம் முழுவதன் வாழ்க்கைப் போராட்டங்கள் மற்றும் ஏக்கங்கள் ஆகியவற்றோடு ஒருமைப்பாட்டுணர்வு கொண்டு நம் காலங்களின் அறிகுறிகளைத் தெளிந்துதேர்ந்து ஒருவர் ஒருவருக்குச் செவிமடுத்து இறைமக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து முன்னோக்கிச் செல்ல தூய ஆவியாரின் வரங்களை மன்றாடினார். ஒருங்கணைப்பு, பங்கேற்பு மற்றும் மறைப்பணி ஆகியவை வழியாக திருஅவையின் ஒருங்கிணைந்த பயணத்தை எவ்வாறு அடையலாம் என விளக்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்தப் பயணத்தில் எதிர்கொள்ளப்படும் ஆபத்துக்கள் பற்றி எச்சரிக்கை விடுத்ததோடு இப்பயணம் வழங்கும் வாய்ப்புக்களையும் எடுத்துரைத்தார். ஒன்றிப்பு எனும் கொடையைப் பெற்று வாழ்கின்ற மற்றும் தூய ஆவியாரின் குரலுக்குத் திறந்த மனதுடன் செவிமடுக்கின்ற ஒரு திருஅவையை நாம் அனுபவிக்கும் வண்ணம் ஒரே இறைவனின் மக்கள் என்ற உணர்வில் ஒன்றிணைந்து பயணிப்போம். என்று கேட்டுக்கொண்ட திருத்தந்தை மாமன்றம் என்பதன் பொருளையும் விளக்கினார். மாமன்றம் என்பது ஒரு பாராளுமன்றமோ அல்லது கருத்துக்களைப் பலனாய்வு செய்யும் ஓர் அமைப்போ அல்ல, மாறாக அது ஒரு திருஅவை நிகழ்வு அதை இயக்குபவர் தூய ஆவியார், அவரின்றி மாமன்றம் என்பதே கிடையாது என்பதை வலியுறுத்திக் கூறினார். திருத்தந்தை பிரான்சிஸ்**

### சந்தித்தல்
10.10.2021 ஞாயிறன்று வழங்கப்பட்டிருந்த நற்செய்தியை மையப்படுத்தி தன் மறையுரையைத் துவக்கியத் திருத்தந்தை, நற்செய்தியின் ஆரம்பத்தில் "இயேசு புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த போது" என்று கூறப்பட்டிருந்த சொற்களைச் சுட்டிக்காட்டி, இயேசு, மக்களைச் சந்திப்பதில் ஆர்வமும் திறமையும் கொண்டிருந்ததைப்போல் நாமும் இந்த சந்திப்புக்கலையை வளர்த்துக்கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம் என்று எடுத்துரைத்தார். சந்திப்புக்கலையை வளர்ப்பதற்கு, இறைவனை நோக்கியும், அயலவரை நோக்கியும் திறந்தமனம் கொண்டிருப்பது முதல் தேவை என்பதை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்.

### செவிமடுத்தல்
இறைவனையும் மனிதர்களையும் சந்திப்பதற்கு மிக முக்கியமான தேவை செவிமடுக்கும் பண்பு என்பதை, தன் இரண்டாவது கருத்தாகக் கூறியத் திருத்தந்தை, எவ்வித முற்சார்பு எண்ணங்களும் இன்றி, திறந்த உள்ளத்துடன் செவிமடுப்பது, உண்மையிலேயே திருஅவைக்கு மிகவும் தேவையான ஒரு பண்பு என்று கூறினார். ஒவ்வொரு தலத்திருஅவையிலிருந்தும் கேட்கப்படும் கேள்விகள் உணர்த்தப்படும் கவலைகள், மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றிற்கு செவிமடுப்பது இந்த மாமன்றத்தின் முக்கிய தயாரிப்பாக இருக்க வேண்டும் என்று திருத்தந்தை தன் மறையுரையில் தெளிவுபடுத்தினார்.

### தெளிந்து தேர்தல்
சந்தித்தல் மற்றும் செவிமடுத்தல் என்ற இரு நிலைகளும், தன்னிலேயே முடிவுகள் அல்ல, மாறாக அவற்றின் வழியே அனைவரும் இணைந்து சரியான தெரிவுகளை மேற்கொள்ள தெளிவுகள் உருவாகவேண்டும் என்றார்.

**"இந்த உலகம் பல துன்பங்களை அனுபவிப்பது கெட்டவர்களால் அல்ல அதை அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் நல்லவர்களால் தான்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதோ காலம் நெருங்கி வந்துவிட்டது

இனி வரும் நாட்களில் அடிக்கடி இந்த வார்த்தைகளை நாம் திருப்பலி இறைவார்த்தைகளில் கேட்கலாம். கிறிஸ்து அரசர் விழா தொடங்கி "அரசராகப் பிறந்திருக்கின்ற குழந்தையைக் காண வந்தோம்", என்ற நாள் வரை இடைவிடாத அழைப்பாக இது ஒலித்துக் கொண்டேயிருக்கும். எத்தனை வருடங்கள் இந்த வார்த்தைகளைக் கேட்டிருப்போம். எப்போதாவது நெருங்கி வரும் காலத்தைக் குறித்து எண்ணியிருக்கிறோமா?

'நெருங்கி வருகிறது' என்றதும் இறுதித்தீர்வு, உலகமுடிவு, என்று இயேசுவின் வருகையை இப்படி பெரிய நிகழ்வாக முன்னிறுத்தி Mega ஆயத்தம், Mega பிரசங்கம், Mega ஒலி ஒளி அமைப்பு, Mega மண்டபம், Mega ஜனத்திரள் etc etc என்று பிரமாண்டங்களின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கும் நாம் ஏனோ எனக்கான நேரம் நெருங்கி வந்துவிட்டது என்று சிறிய அளவில் / தனிப்பட்ட ரீதியில் சிந்திக்கத் தவறிவிடுகின்றோம்.

"எறும்பைப் போல் உபதேசிப்பார் யாருமில்லை, ஆனால் எறும்பு பேசுவதில்லை" என்பார் அறிஞர் பிராங்களின். சின்ன மணித்துளியும் தேவையானது, என் வாழ்க்கையை செதுக்குவதில், வளர்ப்பதில் முக்கியமானது என்பதை சிறிய எறும்புகளைப் பார்த்துக் கற்றுக் கொண்டோமென்றால் கிறிஸ்து அரசரை சந்திக்க நாம் வேறாக பலிகளும், யாகங்களும் செய்ய வேண்டியதில்லை.

"இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்" (2கொ 6,2) என்ற எண்ணம் எம் ஒவ்வொருவருக்குள்ளும் வளர்ந்து விட்டால் எப்போது என்று ஏங்காமல் இப்போதே வாழத் தொடங்கிடுவோம். அப்போது இயேசு சீக்கிரம் வருகிறாரா? அதி சீக்கிரம் வருகிறாரா? அண்மையில் உள்ளாரா? அருகில் உள்ளாரா? என்ற கவலையின்றி இயேசு எப்போதும் என்னோடு உள்ளார், என்னுள் இருக்கின்றார் என்று ஒவ்வொரு நிமிடத்தையும், மணியையும், நாளையும் பயன்படுத்திக் கொண்டு வெற்றி பெறமுடியும்.

காலம் இன்னும் இருக்கின்றது என்று அனைத்து வேலைகளையும் தள்ளிப்போடும் அனைவரையும் பார்த்து நீதிமொழிகள் ஆசிரியர் இவ்வாறு கூறுகின்றார்: "இன்னும் சிறிது நேரம் தூங்குங்கள், இன்னும் சிறிது நேரம் உறங்குங்கள், கையை முடக்கிக் கொண்டு இன்னும் சிறிது நேரம் படுத்திருங்கள். வறுமை உங்கள் மீது வழிப்பறிக் கள்வரைப் போல் பாயும் ஏழ்மை நிலை உங்களைப் போர் வீரனைப் போல் தாக்கும்." (நீதிமொழி 6, 10,11) காலம் நெருங்கி வந்துவிட்டது என்ற வார்த்தைகளை கேட்கும்போதெல்லாம் "என் காலம் நெருங்கி வந்துவிட்டது என்று சொல்லிப்பாருங்கள்" ஓட வேண்டும் என்ற ஆர்வம் எமக்குள்ளே பற்றியெரியும். அப்போது எமக்குள் சுடர்விடும் நெருப்பை அணைய விடாது தொடர்ந்து எரிய வைப்போமென்றால். வெற்றி நமதே! இயேசு நம்முடனே (இம்மானுவேல்)!

மீண்டும் சந்திப்போம்.
இறையாசீரோடு
ஆசிரியர்

"ஒருங்கிணைந்த பயணம் என்பதே, திருஅவையின் வாழ்வுமுறை "மாமன்றம்" என்ற சொல்லின் உட்பொருளான "ஒன்றிணைந்து பயணித்தல்" என்பதே அதனைத் தெளிவாகச் சொல்கிறது. இந்தப் பயணம் தூய ஆவியாருக்குப் பணிந்து நடப்பதால் கிடைக்கும் கனியாகும். இந்தப் பயணத்தில் அனைவருக்கும் ஒரு பங்கு உள்ளது"
திருத்தந்தை பிரான்சிஸ்

## படித்ததில் பிடித்தது

அருட்பணி T. கிங்ஸிலி றெரபட்

## துஷ்டன்



பொன்மாலைப் பொழுது.
நூற்றுக்கணக்கில் குளத்துத் தவளைகள்.

பாதி உடல் தண்ணீரில் மீதி உடல் வெளியில் காட்டி....
'திரு திரு" என விழித்துக் கொண்டிருக்க...
பார்க்க வெகு அழகாய்த் தெரிந்தன.

துஷ்டன் ஒருவன் அங்கு வந்தான்.
அழகை இரசிக்கத் தவறினான்.

கத்திக்கல் ஒன்றை எடுத்தான்.
எடுத்த வேகத்தில் குளத்துக்குள் 'சர்... சர்.." என்று விட்டான்.

கல் ஒலியைக் கேட்ட நொடிப் பொழுதில்
அத்தனை தலைகளையும் உள்ளே இழுத்துக் கொண்டன தவளைகள்.

அந்தக் காட்சியைக் கண்டு அகமகிழ்ந்து
கைகொட்டிச் சிரித்தான் துஷ்டன்.

இரண்டே நிமிடங்களில்...
ஒரு தவளை மட்டும் மெல்லத் தலையை வெளியே நீட்ட
உருட்டிய விழிகளோடு எல்லாத் தவளைகளும்
ஒவ்வொன்றாகத் தலைகாட்டின.

அடுத்தடுத்து கற்களை விட்டான் துஷ்டன்.

அதேபோல் நொடிப்பொழுதில்
தலைகளைத் தண்ணீருக்குள் பதுக்கிக்
கொண்டன தவளைகள்.

பயமின்றி மூழ்கிக்கொண்டிருந்த கத்திக்கல்
பயந்தபடி மூழ்கிக் கிடந்த தவளைகளிடம்
கேட்டது:
'ஏன் இப்படி அஞ்சி
நடுங்குகிறீர்கள்?
என்னைக் கண்டால் அவ்வளவு
பயமா?'

தவளைகள் கூறின:
'அட... சுறுகெட்ட கத்திக்கல்லே...
நாங்கள் அஞ்சி நடுங்குவது
உன்னைக் கண்டு அல்ல,
உன்னை எறிந்தவனைக் கண்டு."

அணுகுண்டு...
ஆபத்தானதல்ல.
அருமையான கண்டுபிடிப்பு.
அதை...
கையில் வைத்திருப்பவனே ஆபத்தானவன்.

உன்னை நோக்கி ஒரு அம்பா?
அம்பை நோவாதே...!
எய்தவனைக் கண்டுபிடி.



இம்மாத மேற்கோள்கள் மாவீரன் நெப்போலியனின்
சிந்தனைகளிலிருந்து



"முன்னேற்றத்தை நோக்கி அடியெடுத்து வையுங்கள் அது எத்தனை சிறியதாக இருந்தாலும் பரவாயில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வு சார்ந்த வழிபாடு – 10

# திருவழிபாட்டில் உடல்நிலைகளும், சைகைகளும் – 02

**அருட்பணி. அலெக்சாண்டர்**

முழங்காலிடுதல்:

"அர்ச்சிப்பு நேரத்தில் உடல் நலம், இடநெருக்கடி பங்கேற்கும் மக்களின் எண்ணிக்கை மிகுதி அல்லது வேறு தகுந்த காரணங்கள் தடையாக இருந்தால் தவிர நம்பிக்கையாளர் முழங்காலிடுவர். அர்ச்சிப்புக்குப் பின் அருள்பணியாளர் முழங்காலிடும்போது, முழங்காலிட முடியாத மக்கள் தாழ்ந்து பணிந்து வணங்க வேண்டும்" (GIRM 43) முழங்காலிடும் உடல் நிலை மனவருத்தத்தை வெளிப்படுத்துவதன் அடையாளமாகத் தொடக்ககால திரு அவையில் கருதப்பட்டது. பாவத்தைக் குறித்த விழிப்புணர்வு தரைமட்டும் நம்மைத் தாழ்த்துகிறது. எனவே பாவத்துயர் கழுவாய்ச் செயலாக முழங்காலிடுதல் கருதப்படுகிறது. அதனால் தான் தொடக்ககால திரு அவையில் ஞாயிற்றுக்கிழமைகளிலும், பாஸ்கா காலத்திலும் கிறிஸ்தவர்கள் முழங்காலிட வேண்டாமென அறிவுறுத்தப்பட்டனர். ஏனெனில் உயிர்ப்பின் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவிக்கும் நாள்கள் இவை. அதன் தொடர்ச்சியாகத்தான் மூவேளை மன்றாட்டு சொல்லப்படும் போது ஞாயிற்றுக்கிழமைகளிலும், பாஸ்கா காலத்திலும் எழுந்து நிற்கிறோம். முழங்காலிடுதல் மிகுஉயர்வணக்கத்தையும், ஆராதனையையும் குறித்துக் காட்டுகிறது. நிற்கும் போது ஒரு நபர் தன் முழு வடிவில் இருக்கிறார். முழங்காலிடும் போது ஒருவர் தன்னையே, தன் உருவையே மடக்கி பாதியாக்கி இறை உடனிருப்பின் முன் தன் ஆராதனையைச் செலுத்துகின்றார். எனவே தான், 'தூயவர், தூயவர்...' முடிந்ததிலிருந்து பெரிய 'ஆமென்' சொல்லும் வரையும், 'உலகின் பாவம் போக்கும்...' முடிந்ததிலிருந்து திருவிருந்து வரையும் வழக்கமாக ஆராதனையின் வெளிப்பாடாக முழங்காலிடுகிறோம்.

முழங்காலிடுதல்: மனத்துயரின் அடையாளம், பாவக் கழுவாய்ச் செயலின் அடையாளம், வணக்கத்தின் அடையாளம் மற்றும் அராதனையின் அடையாளம்.

அமர்தல்: "நற்செய்தி வாசகத்துக்கு முன் வரும் வாசகங்களின் போதும், பதிலுரைத் திருப்பாடல், மறையுரை, காணிக்கைப் பொருள்களைத் தயார் செய்தல் ஆகிய நேரங்களிலும் மக்கள் அமர்ந்திருக்கலாம். திருவிருந்துக்குப் பின் அமைதி காக்கும்போது, சூழ்நிலைக்கு ஏற்ப அமரலாம்" (GIRM 43) அமர்தல் செவிமடுத்துக் கேட்பதன், கவனிப்பதன் மற்றும் தியானிப்பதன் அடையாளம். எனவே தான், இறை வார்த்தையைக் கவனமுடன் கேட்கவும், அதனை வாழ்வோடு இணைத்துத் தியானிக்கவும், திருவிருந்தில் பெற்றுக் கொண்ட கிறிஸ்துவின் உடனிருப்பை உணர்ந்து தியானிக்கவும் அமர்கிறோம்.

அமர்தல்: செவிமடுத்துக் கேட்பதன் அடையாளம், கவனிப்பதன் அடையாளம், மற்றும் தியானிப்பதன் அடையாளம். இதனோடு தரையில் விழுந்து தொழுதல் (Prostration) என்கிற உடல்நிலையும் நம் கலாச்சார சூழலில் பயன்படுத்தப்படுகிறது. நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணக்கம் செலுத்துவது முழுமையான கையளிப்பின் அடையாளமாகும். அருள்பணியாளர் அல்லது துறவற அர்ப்பணத்தில் / புனிதர்கள் மன்றாட்டு மாலையின் போதும், பெரிய வெள்ளிக்கிழமை திருச்சடங்குகளின் தொடக்கத்திலும் இந்த உடல்நிலை கடைப்பிடிக்கப்படுகிறது. நம்பிக்கையாளர்கள் தங்கள் தனி இறைவேண்டல்களில் தற்கையளிப்பின் அடையாளமாக நெடுஞ்சாண்கிடையாக விழுந்து மன்றாடுவர். உடலின் அனைத்து உறுப்புகளும் தரையில் படுமாறு விழுந்து இறைவனுக்குத் தம்மையே கையளிப்பதன் முழுமையாக ஆராதிப்பதன் அடையாளமாகும். உடல் நிலைகளையும், சைகைகளையும் குறித்துக் கூறும்போது, "உரோமை வழிபாடு முறை வரையறுத்துள்ள படி(நடக்கவும்), தனிப்பட்ட விருப்பங்களையும் தன்னிச்சையான போக்கையும் தவிர்க்கவும்..." (GIRM 42) திரு அவை அழைக்கின்றது. உடல் மொழியைச் சீராக்கி நம் வழிபாட்டை வாழ்வாக்குவோம்.

திருவழிபாட்லும், தனி இறைவேண்டல்களிலும் 'சிலுவை அடையாளம் வரைதல்' நம்பிக்கையாளர்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. இது மிகவும் பழக்கமான சைகையாகும். இது திருவழிபாடு தொடங்கும் போதும், முடியும் போதும் இறை ஆசியின் அடையாளமாக இருக்கிறது. ஏனெனில் தனது சிலுவைச்சாவின் வழியாகவே கிறிஸ்து மனித இனத்தை மீட்டார். எனவே தான் மீட்பின் அடையாளமாக சிலுவையை தன் மீது வரைந்து, இறை ஆசியில் வளர, ஒரு கிறிஸ்தவர் பிறருக்கு ஆசிவழங்கும் போதும் சிலுவை அடையாளம் வரைந்து ஆசி வழங்குகிறார். திருமுழுக்கின் போது நெற்றியல் வரையப்படும் சிலுவையோடு தொடங்குகிறது கத்தோலிக்க கிறிஸ்தவ வாழ்வு, ஒருவரின் இறுதிச் சடங்கில் அவரது உடல்மீது வரையப்படும் சிலுவையுடன் நிலைவாழ்வை நோக்கிப் பயணிக்கிறது. நற்செய்தி வாசிக்கப்படும் போது நம் நெற்றி, உதடுகள், மற்றும் மார்பில் சிலுவை அடையாளம் வரைந்து நற்செய்தியை சிந்திக்க, எடுத்துரைக்க மற்றும் வாழ்வாக்க வரம் வேண்டி நம்மையே தயாரிக்கும் விதமாக, நமக்கு நாமே ஆசி வழங்கிக்கொள்கிறோம்.

பவனி: "அருள்பணியாளர் திருத்தொண்டரோடும், பணியாளர்களோடும் பீடத்தை நோக்கி வருதல், திருத்தொண்டர் நற்செய்தி அறிவிக்கும் முன்னர் வாசகமேடைக்கு நற்செய்தி வாசக நூலை எடுத்து வருதல், நம்பிக்கையாளர் காணிக்கைப் பொருள்களைக் கொண்டு வருதல், திருவிருந்தை உட்கொள்ளப் பவனியாக வருதல் ஆகிய செயல்களும், பவனிகளும் சைகைகளில் அடங்கும். இத்தகைய செயல்களும், பவனிகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறைப்படி அவற்றுக்கு உரிய பாடலுடன் அழகுற நடைபெறுவது விரும்பத்தக்கது. (GIRM 44) பவனிகள் வெறுமனே ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு செல்வதற்காக மட்டும் அமைக்கப்பட்டவை அல்ல. அவை நாம் யார், நாம் என்ன செய்கிறோம் என்பதை சடங்காக வெளிப்படுத்தும் செயல்கள்.

திருவழிபாட்டிலுள்ள ஒவ்வொரு பவனியும் நாம் பயணம் செய்யும் திரு அவை, கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டோரின் கூட்டம், மற்றும் விண்ணகயெருசலேமை நோக்கி பயணிப்போர் என்பதை சுட்டிக்காட்டுகிறது. பவனிகளில் உணர்ந்து பங்கேற்கிற போது, நம் இறைவேண்டல் மேம்படுகிறது. திருவழிபாட்டு ஆண்டில், இன்னும் சில பவனிகள் உள்ளன. குருத்தோலை பவனி, பெரிய வெள்ளியன்று திருச்சிலுவை பவனி, பாஸ்காத்திருவிழிப்பில் பாஸ்காத்திரி பவனி, கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழாவில் நற்கருணை பவனி, ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணிக்கும் விழாவில் (பிப்ரவரி – 2) எரியும் திரிகளுடன் பவனி, திருமுழுக்கின் போது திருமுழுக்குத் தொட்டியை நோக்கி பவனி, திருமண நாளில் பவனி, அடக்கச் சடங்குத் திருவழிபாட்டில் பவனி என பல பவனிகள் நாம் பயணிகள் என்பதையும், திரு அவையாக இணைந்து நம் இலக்கான விண்ணகத்தை அடைய முயலவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டி நம் மனங்களையும், இதயங்களையும் இறைவேண்டலில் விழிப்புடன் ஒன்றிக்கச் செய்கின்றன.

பணிந்து வணங்குதல்:

தாழ்ந்து பணிதல் அல்லது தலை வணங்குதல் அதிகப்படியான மரியாதையைக் காட்டுகிறது. பணிவின் அடையாளமாக இருக்கிறது. நம்பிக்கை அறிக்கையில், "தூய ஆவியால் கன்னி மரியாவிடம் உடல் எடுத்து மனிதர் ஆனார்" என அறிக்கையிடும் போது தலை வணங்குகிறோம். கிறிஸ்து தனது மனுவுடலேற்பின் வழியாக மனித இயல்பில் பங்குபெற்று பாவத்திலிருந்து மீட்டு, இறை உறவிற்குள் நம்மை இணைக்கத் திருவுளம் கொண்டதற்காக நமது நன்றியையும், உயர் வணக்கத்தையும் செலுத்தும் விதமாக தலை வணங்குகிறோம். ஆண்டவருடைய பிறப்பு அறிவிப்புப் பெருவிழாவின் போதும் (மார்ச் 25) கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவின் போதும் (டிசம்பர் 25) இந்த நன்றியறிதலை முழங்காலிட்டு ( Genuflect - வலது முழங்காலை மடக்கித் தரைவரை தொடுவது) மேற்குறிப்பிட்ட வார்த்தைகளை அறிக்கையிடும் போது வெளிப்படுத்துகிறோம். இன்னும் விரிவாக இதனைக் குறித்து அறிந்து கொள்ள 'உரோமைத் திருப்பலி நூலின் பொதுப் படிப்பினை' எண்கள் 274 மற்றும் 275 ஆகியவற்றைப் படிக்கலாம் (GIRM 274& 275) நற்கருணைத் திருவிருந்தில் நற்கருணை உட்கொள்ளும் முன் ஒவ்வொரு நம்பிக்கையாளரும் தலை வணங்கி அதில் எழுந்தருளி இருக்கிற கிறிஸ்துவை ஆராதிக்கின்றனர்.

(தொடரும்...)

---

## வாழ்வுமேலோங்கவே......

**Fr. N.C அருள்வரதன்**

**கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்**

**போட்டியில் எல்லோரும் பங்கு கொள்ளலாம்**
**இதோ கவிதை வரிகள்**

- கொண்டு வாழ்வில்
- நீதியின் பால் தாகமே
- நியாயத்தை நிலைநாட்ட
- நீதியினைக் காணாது
- முன்வருவோமே
- நிர்க்கதியாய் நிற்கின்ற
- நிலை குலைந்து
- வாழ்வுகளை நிலை மாற்றி
- நியாயத்தைக் கண்டடைய
- நம்மால் முடிந்தவரை
- செயற்படுவோமே
- மேலோங்கும் போதினிலே
- அநீதிகள் அதர்மங்கள்
- உதிரங்கள் கொதித்தெழுமே
- உண்மைகள் மறைந்து கொள்ள
- அறிந்து அதை அடக்கிவிட்டு
- அநீதிகளின் ஆர்ப்பரிப்பை
- நீதிகளை உயிர்வாழ
- நிலை கொள்ளச் செய்வதற்கு
- தூய மன நிலைகளினால்
- துயர் நிலையை மாற்றுவோமே

**இப்போது கவிதைவரிகளை சரியாக வடிவமையுங்கள்**

**முடிவுத்திகதி 31.12.2021**

---

**"முடியாது என்ற வார்த்தையை முட்டாள்களின் அகராதியில் மட்டுமே காணமுடியும்!"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் இறையியலும் முதற்பாவமும்

*அருட்பணி. கிறிஸ்டிபோல்*
*இயக்குநர், பொதுநிலையினர் பணியகம்*
*கண்டி மறைமாவட்டம்*



எமது உடல் வெளிப்பார்வைக்கு பல பொருள் தந்தாலும், அது பல அகப்பொருளைக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக, விஞ்ஞானிகள், வைத்தியர்கள், உடலியல் அறிஞர்கள் ஆகியோர் பலவிதமாக உடலை நோக்குகின்றனர். அவ்வாறே, மனித உடல் இவையெல்லாம் கடந்து கடபுலனாகாத பல ஆன்மீக பரிமாணங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது.
எடுத்துக்காட்டாக, நாம் ஒரு நண்பரைப் பற்றிப் பேசும் போது, நாம் அவரது ஆளுமையைப்பற்றியும், அவரது நடத்தை, அவரது ஆற்றல் பற்றி குறிப்பிடுகின்றோம். அவ்வாறே, அவரின் தோற்றம், உடலழகு பற்றியும் குறிப்பிடுவோம். ஆகவே தான் அந்த தன்மை கட்புலனாக மறைந்திருக்கும் ஆன்மீக உண்மைப்பற்றிக் குறிப்பிடுகின்றோம். ஒரு மனிதன் கொலை செய்யப்படும்போதும் அவனுடைய உடல் மட்டுமல்ல அவனது மனித ஆள்தன்மையும் கொலைசெய்யப்படுகின்றது. ஒரு பெண் அல்லது ஒரு சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும் போது அவர்களின் உடல் மட்டுமல்ல மாறாக அவர்களின் ஆள்த்தன்மையும் சாகடிக்கப்படுகின்றன.

ஒரு மனிதன் இந்த கட்புலனாகாத விடயத்தைத்தான் அவரின் ஆன்மா என்று அழைக்கின்றோம். மனிதர்களிடம் காணப்படும் வெளி அமைப்பை விட இந்த ஆன்மீக குணங்கள்தான் மனிதர்களை ஒன்றாக இணைக்கின்றன. ஆகவே தான் மனித உடல் குறியீட்டு தன்மையுடையது என்று திருத்தந்தை கூறுகின்றார். மனித உடலுக்குள் உள்ள இந்த சிறப்பம்சம் காரணமாகவே மனிதர்கள் தனித்தன்மை வாய்ந்தவர்கள் என்கின்றோம். வில்லியம் மே என்கிற சிரேஷ்ட அறநெறி இறையியலாளர் மனிதர்கள் உடல்நபர்கள் (Body - Person) என்கிறார். மனித உடலானது நேரம், காலம், இடம் ஆகியவற்றுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆன்மாவே முடிவில்லா தன்மை உடையது என்கிறார்.

நாம் குறியீட்டு மொழியில் (Symbolic Language) பேசும்போது வெளி உலகத்திற்கு அது குறித்துக்காட்டும் பொருளுக்கும் அதன் அகப்பொருளுக்கும் இடையில் ஒரு தொடர்பை ஏற்படுத்துகின்றோம். அல்லது குறியீட்டுக்கும் அது குறித்துக்காட்டும் விடயங்களுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்துகின்றோம். இவ்வாறே எமது உடலில் உள்ள ஐம்புலன்களும் இந்த இரு பொருள்களை கொண்டிருகின்றன. அதாவது அகப்பொருள், புறப்பொருள் என்னும் இருவகை பொருள்களை கொண்டிருக்கின்றன.
உதாரணமாக - தொடுகை என்கிற புலன் ஒரு வெளியடையாளம் ஆகும். இந்த வெளியடையாளம் பல அகப்பொருள்களையுடையது. அன்பை பரிமாறுதல், தாலாட்டுதல், அரவணைத்தல், தழுவுதல் ஆகிய விடயங்களை தொடுகை மூலம் மேற்கொள்கிறோம். இவை அனைத்தும் அன்பின் வெளிப்பாடுகள், மனித தொடுகை அன்பையும், கருணை, ஏற்றுக்கொள்ளல் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றது.

செவிகொடுத்தல் – செவிகொடுத்தல் என்பது நாம் மிக கவனமாக, மிக அவதானத்தோடு செவிமடுத்தல் ஆகும். இதுவும் அன்பையும் கரிசனையையும் வெளிப்படுத்துகின்றது. பார்வை என்னும் புலனும் அறிவை பெறுவதையும், அவதானித்தல், கிரகித்தல், கரிசனை காட்டுதல் ஆகிய பல பொருள்களை வெளிப்படுத்துகின்றது. புனித யோவான் காண்பதை அல்லது பார்வையை நம்பிக்கையோடு தொடர்புபடுத்துகின்றார்.

வாசனை என்பது ஒன்றை நுகரும் போது அந்த வாசனை எங்கிருந்து வருகின்றது. அதன் ரகம் என்ன என்பதை அறிய எம்மை ஈர்க்கின்றது. சுவை என்கிற புலனும் பசியோடும் தாகத்தோடும் தொடர்புடையது. பசியோ தாகமோ ஏற்படும் போது நாம் எதையாவது சுவைக்க ஆசைப்படுகின்றோம். நாம் சாதாரண நாளிதழை வாசிக்கும் போது, இவ்வாறான குறியீட்டு மொழிகளை ஏராளமாக காணலாம். ஆகவே நாம் வாழ்கின்ற உலகம் பல குறியீடுகளையும் சின்னங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது.

இப்போது ஆதாமின் முதல் தனிமைக் குறித்துக்காட்டும் எதிர்மறை பக்கத்தை ஆராய்வோம். ஆதாமின் முதல் தனிமையில் அவருடைய உடலுக்கு ஏற்ற, தகுந்த வேறொரு உடலை அவனால் கண்டுகொள்ள முடியவில்லை என்பதையும், இறைவனுடைய படைப்பில் பல உடலுள்ள உயிர்கள் இருந்த போதும் மனிதன் உறவினை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய எந்த உடலமைப்பையும் அவனால் கண்டுகொள்ள முடியவில்லை என்பதையும் அறிகிறோம். ஆனால், ஏவாளின் உடலை அவன் தனக்கு உகந்த, ஏற்ற உடலாக கருதினான். ஏவாளின் உடலே மனித உடல் குறித்துக்காட்டும் அகப்பொருள் உடையதாக இருந்தது. விலங்குகளின் உடலில் மனிதனின் உடலுக்கு ஏற்ற எந்த அகப்பொருளும் தென்படவில்லை. விலங்குகளின் உடலைப்போல அல்லாமல் மனிதனின் உடலானது உடலின் வெளித்தோற்றத்தையும் மனிதனின் அகத்தோற்றத்தையும் வெளிப்படுத்துகிறது. ஆகவே மனித உடல் குறியீட்டுத்தன்மையுடையது என்கின்றோம்.

## 2. மனித உடல் இனப்பெருக்க இயல்புடையது (The Human Body is Nuptial)

முதல் மனிதன் ஆதாம் முதல் தடவையாக ஏவாளை சந்தித்தபோது விலங்குகளிடையேயிருந்து ஏவாள் வித்தியாசமாக இருப்பதை உணர்ந்தான். தனது உடலைப் போலவே அவளுக்கும் ஒரு மனித உடலுண்டு என்பதையும் தனது உடலால் அவளோடு உறவினை எற்படுத்திக் கொள்ள முடியும் என்பதையும் அறிந்துக் கொண்டான். ஆணின் உடலும் பெண்ணின் உடலும் ஒருவர் மற்றவரின் தேவையை பூர்த்தி செய்கின்றன என்பதை புரிந்துகொண்டான். ஆணும் பெண்ணும் ஒன்றாய் வாழமுடியும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

ஆண் பெண் இருபாலாருடைய தனிப்பட்ட சிறப்பம்சங்களை நினைத்துப் பார்ப்போம். ஆண்களும் பெண்களும் தனித்தன்மை வாய்ந்தவர்கள். ஆணின் உடல் வலிமை உள்ளதாகவும் கடினமானதாகவும் இருக்கிறது. பெண்ணின் உடலோ மென்மையானதாக இருக்கிறது. அவர்களுடைய பாலியல் வேறுபாடுகளும் தனித்தன்மைவாய்ந்ததாக இருக்கின்றன. ஆணின் பாலுறுப்புகள் வெளியிலும், பெண்ணின் பாலுறுப்புகள் பெண்ணின் உடலுக்கு உள்ளேயும் காணப்படுகின்றன. ஆகவே தான் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் பூர்த்தி செய்யக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். (Complemeentarity) அவர்கள் உடலுறவினூடாக ஒருடலாக மாறுகின்றார்கள். திருத்தந்தை 2ம் ஜோன் போல் அவர்கள் மனித உடலானது அன்பு உறவுக்காக படைக்கப்பட்டுள்ளது என்கிறார். ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் நோக்கும் போது அன்புணர்வினால் ஈர்க்கப்படுகின்றார்கள். ஒருவர் மற்றவரால் கவரப்படுகின்றார்கள். அவர்கள் உடலியல் ரீதியாக மட்டுமல்ல ஆன்மீக ரீதியாகவும் கவரப்படுகின்றார்கள். திருமணத்தினால் அவர்கள் ஒன்றாய் இணைகின்றார்கள். ஆகவே ஆணும் பெண்ணும் ஒன்றாய் இணையும்போது குறியீட்டுப் படைப்புகளாக செயல்களை செய்கின்றார்கள். உதாரணமாக ஒருவரையொருவர் தழுவிக்கொள்கின்றார்கள். அன்பான வார்த்தைகளைப் பேசிக்கொள்கின்றார்கள். தங்கள் செயலாலும் வார்த்தைகளாலும் அன்பை ஒருவருக்கொருவர் வழங்குகின்றார்கள். ஆகவே தாம்பத்திய உறவு என்பது வெறும்உள்ளரங்க "விளையாட்டு அல்ல" மாறாக அது ஒரு மதிப்பிற்குரிய செயல் கணவரும் மனைவியும் தாம்பத்திய உறவின் போது பரிமாற்றிக்கொள்கின்ற உறவானது ஒரு உடல் மொழியாகும். திருத்தந்தை 2ம் ஜோன் போல் பாலுறவை ஓர் உடலின் மொழி என்கிறார். (Language of the Body)

உடல் ஒரு மொழியை பேசுகிறது. உடல் தன்னைப் பற்றி அறிமுகம் செய்கின்றது என்று வைத்துக்கொள்ளுவோம். இந்த உடல் உண்மையானது இதை உங்களால் பார்க்க முடியும். இந்த உடல் சடப்பொருளால் உருவானது. இவ்வுடல் வெறும் வெளித்தோற்றத்தைவிட மிக ஆழமான கருத்துக்களையும் உட்பொருளாக கொண்டிருக்கிறது. என் இதயம், என் அறிவு,

## ஏதேன் தோட்ட மனிதர்கள்



என் ஞாபகங்கள் ஆகியவற்றை என் உடல் வெளிப்படுத்துகின்றது. என் உடலானது எனது முழு ஆள்தன்மையையும் வெளிப்படுத்தும் ஒரு குறியீடு ஆகும். உடலின் வெளிப்படையான உண்மைகள் கட்புலனாகாத அகப்பொருளை வெளிப்படுத்துகின்றன. அதேபோல் உடலானது மற்றவரோடு உறவினை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டது. இம்மனித உடல் அன்பிற்காகவும் நட்பிற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. அது கீழான இன்பங்களுக்கும் உருவாக்கப்படவில்லை. மாறாக குறியீட்டு தன்மை கொண்ட என் உடல் மிக உன்னதமான ஆன்மீக பரிமாணங்களைக் கொண்டது. என் உடலின் ஊடாகவே நான் எனது ஆன்மீக உண்மையை வெளிப்படுத்துகின்றேன், என்று திருத்தந்தை ஜோன் போல் குறிப்பிடுகிறார்.

ஆகவே மனித உடல் எமக்கு கற்றுக்கொடுப்பது யாதெனில், மனித பாலுறவு என்பது ஒரு உடல் மொழியாகும். பாலுறவினால் தம்பதியினர் உடலின் இன்பத்தின் மொழியைப் பேசுகின்றனர். அது ஆன்மீக மொழியாகும், அன்பின் மொழியாகும். ஆணும் பெண்ணும், தொடுகையின் ஊடாகவும் செவிகொடுப்பதின் ஊடாகவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வதின் ஊடாகவும், தன்னை கொடுத்தல் மற்றும் பெற்றுக்கொள்ளல் ஊடாகவும் மிக நெருக்கமான மொழியைப் பேசிக்கொள்கின்றார்கள். பாலுறவு மிக ஆழமாக, மிக ஆணித்தரமான அன்பைக் போதிக்கின்றது. இதன் அடிப்படையில் செயற்கைக் குடும்பக்கட்டுபாட்டை நோக்கும்போது செயற்கைக் குடும்பக்கட்டுப்பாடு முறைகள் இந்த கோட்பாட்டிற்கு எதிரானது என்பது புலனாகிறது. இது உடல் மொழி உண்மை பேசுவதற்கு தடைவிதிக்கிறது. செயற்கைக் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் உடல் மொழியை உதாசீனம் செய்து, உடலால் மனிதர்களை போலியாக செயற்பட தூண்டுகின்றது. இதைப்பற்றி நாம் பின்னர் ஆராய்வோம்.

மனிதன் தனது பாலுறவின் ஊடாகவே உடல் மொழியை மிகச்சிறப்பாக கையாள இறைவன் ஏற்படுத்தினார். உடல் மொழி என்பது தாம்பத்திய உறவின் மொழியாகும். பாலுறவு என்னும் உடல்மொழி வாய்மொழிப் போலவே பல சொற்களை பயன்படுத்துகின்றது.

உதாரணமாக அறிதல், முத்தம் கொடுத்தல், உடலுறவு, தழுவுதல், அணைத்தல், இணைத்தல், கூடுதல், கருவாகுதல் என்பனவாகும். தனது கணவனோடு உரையாடிக் கொண்டிருக்கும் ஒரு மனைவி தனது காதுகளை பஞ்சு கொண்டு அடைத்துக் கொள்வது முறையா? அல்லது தனது மனைவியுடன் உரையாடும் ஒரு கணவர் தனது வாயில் எதையாவது வைத்துக்கொண்டு அல்லது வாயை மூடிக்கொண்டு பேச முடியுமா? வாயால் உரையாடும் போது இது எவ்வாறு ஏற்புடையதாக அமையாதோ, உடல் மொழியான பாலுறவின் போதும், ஆணுறைகள் அல்லது பெண்ணுறைகள் அணிவது முறையாகாது. ஆகவே, செயற்கைக் குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் மனித உடலில் குறியீட்டு இயல்பு, மற்றும் இனப்பெருக்க இயல்புகளின் உண்மைகளை மாற்றுகிறது. அத்தோடு தூய்மையை சிதைக்கின்றது.

தொடரும்...

"தற்பெருமை கொள்ளும் மனிதனுக்கு வேறு விரோதிகள் தேவையில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கிலங்கை திருஅவை.... (1ம் பக்கத் தொடர்ச்சி ...)

நீதியரசர் பாலேந்திரன் சசிமகேந்திரன் அவர்கள் 1989ம் அண்டு உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பதவிப்பரமாணம் செய்துகொண்டதுடன் 1991ம் ஆண்டு இங்கிலாந்து நாட்டின் சொலிசிற்றராகவும் பதவிப்பிரமாணம் பெற்றார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டமுதுமாணிப்பட்டத்தைப் பெற்றதுடன், சட்டவைத்தியத்தில் டிப்ளோமாவினையும் பூர்த்தி செய்துள்ளார். இலங்கை சட்டக்கல்லூரியில் வங்கி மற்றும் காப்புறுதிச்சட்டங்களில் டிப்ளோமா பிற்கற்கை நெறியினைப் பயின்றுள்ளார். சட்டக்கல்லூரியில் பயின்ற காலப்பகுதியில் தமிழ் மன்றத்தின் செயலாளர், கிறிஸ்தவ அமைப்பின் தலைவர் ஆகிய பதவிகளை வகித்ததுடன், ஹொக்கி மற்றும் கூடைப்பந்தாட்ட அணியின் உறுப்பினராகவும் காணப்பட்டார்.

ஐக்கிய இராச்சியத்தில் சொலிசிற்றர் சில்வா அன்ட் கோ சொலிசிற்றர்ஸ் எனும் நிறுவனத்தில் குடிவரவுச்சட்டங்கள் தொடர்பில் இரு ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் பெற்றவராவார். சுந்தரலிங்கம் அன்ட் அஷோசியேட்ஸ் எனும் சட்டநிறுவனத்தில் சில ஆண்டுகள் பணிபுரிந்த பின்னர் 1997ஆம் அண்டு சட்டமாஅதிபர் திணைக்களத்தில் பதில் அரச சட்டவாதியாக இணைந்து கொண்டார். 1998ஆம் ஆண்டு சட்டவாதியாக நியமனம் பெற்று 2007ஆம் ஆண்டு சிரேஸ்ட அரச சட்டவாதியாக பதவிஉயர்வைப் பெற்றுக்கொண்டார். சட்டமாஅதிபர் திணைக்களத்தில் பணியாற்றிய காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குற்றவியல் வழக்குகளில் வழக்குத்தொடுநராகப் பணிபுரிந்தார். குறிப்பாக போர் உச்சம் பெற்றிருந்த வேளையில் இவர் வழக்குத்தொடுநராக பணியாற்றி காலப்பகுதியில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு மருத்துவ அறிக்கையின் அடிப்படையில் சித்திரவதை இடம்பெற்றிருப்பது உறுதிசெய்யப்பட்டிருப்பின் அச்சந்தேகநபருக்கு பிணை வழங்குவதை அனுமதித்த பெருமையும் நீதியரசர் பாலேந்திரன் சசிமகேந்திரன் அவர்களையே சாரும்.

2010ஆம் அண்டு மேல்நீதிமன்ற ஆணையாளராக நீதித்துறையில் தடம்பதித்து இற்றைவரை இவரது சாதனைகள் எண்ணிலடங்காதவை. 2012அம் ஆண்டு மேல்நீதிமன்ற நீதிகதியாக நியமனம் பெற்றார். கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, கொழுப்பு, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் முதயில குற்றவியல் மற்றும் குடியியல் நீதிமன்றங்களில் மேல்நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றியுள்ளார். இவரது நீதித்துறை சாதனைக்கு சிறந்த எடுத்துக்காட்டு முழு நாட்டினையே சோகத்துள்ளாக்கிய சிவலோகநாதன் வித்தியாவின் பாலியல் வன்புணர்வு கொலை வழக்காகும். 2017ஆம் ஆண்டு மூவரடங்கிய நீதாய மேல் நீதிமன்ற விளக்கத்தில் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டதுடன் இவ்வழக்கினை துரித கதியில் முடித்து வழக்கின் ஏழு குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். கொழும்பு நீதாய மேல் நீதிமன்றம் II இன் நிரந்தரத் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

பல மேல்நீதிமன்ற வழக்குகளை துரித கதியில் முடிக்கும் வல்லமை பெற்றதால் யாழ்ப்பாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் அதிக வழக்குகள் தேங்கிக்கிடந்த நிலையில் பிரதம நீதியரசர் அவர்களால் நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் எட்டு மாதங்களில் 150க்கு மேற்பட்



வழக்குகளை நிறைவுசெய்துள்ளார். இத்தாலி மற்றும் பல்வேறு சர்வதேச சட்ட மாநாடுகளில் பங்கேற்றதுடன் தனது ஆய்வுகளையும் சமர்ப்பித்துள்ளார். 11 ஆண்டுகள் பல மேல்நீதிமன்றங்களில் கடமையாற்றி பின்னர் 14.06.2021ஆம் திகதியன்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமனம் பெற்றார்.

நீதியரசர் பாலேந்திரன் சசிமகேந்திரன் அவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆற்றிய சம்பிரதாயபூர்வ உரையில் "நீதிமன்றத்தில் இரு தரப்பினருக்கும் உண்மை தெரியும். நீதிபதியே விளக்கத்தில் உள்ளார்" எனும் இந்திய மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. ஆர் மித்தா அவர்களின் ஒரு வசனத்தை கோடிட்டு காட்டியிருந்தார். ஒரு நீதிபதி நீதியும் நியாயமுமான தீர்ப்புக்களை வழங்குவதன் மூலம் நீதித்துறையினதும், சட்டத்துறையினதும் பொது மக்களினதும் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

மேலும், சமத்துவக் கோட்பாடு எனும் ஆழ வேரூரின்றிய அடிப்படை உரிமை அரசியலமைப்பில் மட்டுமன்றி அடிப்படை மனித உரிமையிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள சகல பிரஜைகளுக்கும் அத்தகைய சமத்துவத்தை உறுதிசெய்வது நீதித்துறையின் கடமையாகும். தற்போதைய சூழலில் பாலின சமத்துவம் தொடர்பில் சட்டம் எத்தகைய வகிபாகத்தை கொண்டுள்ளது என்பது தொடர்பில் விளக்கியிருந்தார். அவர் யாழ்ப்பாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் கடமையாற்றிய காலப்பகுதியில் தேசவழமை சட்டத்தால் ஆளப்படும் பெண்களுக்கு இழைக்கப்படும் பாரபட்சங்கள் பலவற்றை ஒரு நீதிபதியாக அவதானித்ததாக குறிப்பிட்டார். தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படும் ஒரு பெண் தேசவழமையால் ஆளப்படாத ஆண் ஒருவரை திருமணம் செய்யும் போது அவள் தேசவழமையால் ஆளப்படுவது நிறுத்தப்படும். ஆனால் தேசவழமையால் ஆளப்படாத பெண் தேசவழமைச்சட்டத்தால் ஆளப்படும் ஆண் ஒருவரை திருமணம் செய்யும் போது அவள் திருமணம் நிலைத்திருக்கும் காலப்பகுதியில் அவள் தேசவழமைச்சட்டத்தால் ஆளப்படுவாள். ஆகவே பெண் ஒரு ஆணின் வாழிடத்தைச் சாரும் கோட்பாடு தேச வழமைச்சட்டத்தில் தற்போதும் நிலைத்திருப்பதை அவதானிக்க முடியும்.

தேசவழமைச்சட்டத்தின் தேடிய தேட்டம் எனும் சொத்து வகை தொடர்பில் ஆராய்கையில் இது கணவன் மற்றும் மனைவி இருவராலும் 'அடையப்பெற்ற சொத்து' எனக் குறிப்பிடப்படினும் கணவனின் சம்மதமின்றி மனைவியால் அச்சொத்தினை விற்க முடியாது. திருமணம் வலிதான காலப்பகுதியில் தேடிய தேட்டம் சொத்தின் முகாமையாளராக கணவரே காணப்படுகின்றார். மனைவியின் தனித்துவம் மாற்றியமைக்க முடியாததுமான அங்கீகாரம் பெற்ற நபராக கணவரே விளங்குகிறார். மேலும் யாழப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் தொடர்பான சட்டம் மனைவி தனது அசையாச் சொத்துகள் தொடர்பில் கணவனின் எழுத்துமூலமான சம்மதத்தினை பெறுவதனை கட்டாயமாக்கியுள்ளது. ஆயினும் பிரவு 8ஆனது பெண் வசிக்கின்ற அல்லது சொத்து அமைந்துள்ள பிரதேசத்திற்குரிய மாவட்ட நீதிமன்றத்திற்கு பிரிவு 6இன் கீழான சம்மதம் வழங்கும் அதிகாரத்தை வழங்குகின்றது. இத்தகைய ஆணாதிக்க மனநிலை ஒரு பெண் சொந்த பகுத்தறிவு ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் தகைமையற்றவள் என்பதை வெளிப்படுத்துகின்றது. ஆகவே ஒரு பெண்ணின் சட்ட நிலைமை தனது கணவரினால் கட்டுப்பட்டதாகின்றது.

மேலும் பல்லாண்டுகளின் முன்னர் உருவாக்கப்பட்ட சட்டவாக்கங்களை மீளமைக்க வேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்டுள்ளது. தற்கால சமூகத்தின் தேவைகளையும், அவசியத்தன்மையும் நிவர்த்தி செய்யும் வண்ணம் தேசவழமைச்சட்டத்தின் பிரிவுகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" எனும் திருக்குறளை மேற்கோள் காட்டி தனது வளர்ச்சிக்கு உறுதுணையாகவிருந்த சகலரையும் நினைவுகூர்ந்தார். தனக்கு ஒழுக்கம் போதித்த மறைந்த தனத மந்தை அமரர் ல்க்ஸ்மன் பாலேந்திரன், பாட்டி அச்சம்மா அடைக்கலம் சவரிமுத்து ஆகியோரையும் நினைவு படுத்தினார். தனது வளர்ச்சிக்கு நங்கூரமிட்டு குறிக்கோள்களை அடைய வழிகாட்டிய தாய்க்கும் நன்றி தெரிவித்தார். மேலும் தனக்கு உறுதுணையும் ஊக்கமும் அளிக்கும் மனைவி சட்டத்தரணி இந்துமதி மற்றும் மகன் ஷசாங்கள் ஆகியோர்க்கும் நன்றி தெரிவித்ததுடன் தனது சகோதரரர்கள், உறவினர்கள் மற்றும் சட்டத்துறையில் உறுதுணையாயிருந்தவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

**"நீங்கள் ஒரு விஷயத்தை நன்றாக செய்ய விரும்புகிறீர்களா அப்படியானால், நீங்களே செய்யுங்கள்!"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு – ஆன்மாவின் மொழி

இளையோருக்கான தொடர் - 03

மனித உறவுகள் மாண்பு மிக்கவை, தனித்துவம் வாய்ந்தவை வெறும் உணர்ச்சிகளின் இச்சைகளில் வீழ்ந்து விடாமல் உணர்வு பூர்வமாக புரிதலும், ஏற்றுக்கொள்ளலும், அன்பு செலுத்துவதும், உய்த்துணர்வதும் மனிதர்களால் தான் முடியும். மனிதனின் மேன்மையான குணங்கள் அனைத்தும் உறவில் தான் அழகுற வெளிப்படுகின்றன. உறவுகளில் தான் மனிதனின் உண்மையான முகம் தெளிவாகத் தெரிகின்றது. நம்மை நமக்கே அடையாளம் காட்டுவதும் உறவுகள் தான் "உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால் உலகத்தில் போராடலாம், உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காமல் நீ வாழலாம் தன்னைத் தானும் அறிந்துகொண்டு ஊருக்கும் சொல்பவர்கள் தலைவர்கள் ஆவதில்லையா" என்று கவிஞர் கண்ணதாசன் அழகாகக் கூறியுள்ளார்.

மற்றவர்கள் நம்மைச் சரிவரப் புரிந்துகொண்டு பாராட்டும் போதும், அன்பு ததும்ப நம்மை ஏற்றுக் கொண்டு கொண்டாடும் போதும் வானமே வசப்பட்டது போலாகிறது. நாம் தனித்தீவுகளல்ல, உறவு முறைகள் மற்றவர்களின் இதயங்களை அடையும் பாலங்களாக இருக்கும் பட்சத்தில் அன்பு போர்வையில் அடுத்தவரை அடிமைப்படுத்த, வீழ்த்த அபகரிக்க முயலும் போது அன்பு வியாபாரமாகப் போய்விடுகின்றது. வெறுமையும் வெறுப்பும் உள்ளத்தில் முளைத்து கிளை விடுகின்றது. நாளடைவில் இந்த விஷ விருட்சம் உங்களையும், உங்களை ஆள்வோரையும் அழித்து விடும். வாழ்க்கை எனும் பூங்காவில் பலர் எம்மைச் சுற்றிச் சந்திக்கின்றார்கள். சிலர் வானவில் போல் மறைந்து விடுகின்றார்கள். சிலர் நெஞ்சில் முள்போல் தொடர்ந்து குத்திக்கொண்டேயிருப்பார்கள். சிலர் நல் எண்ணங்களாலும், நல்ல சிந்தனைப் பரிமாற்றங்களாலும் இதயத்தில் நீங்கா இடம் பிடித்து விடுவார்கள். நல் எண்ணங்களால் மனதைத் தொடவைத்து உயர்ந்த உள்ளங்களை உருவாக்க அன்பு அவசியமாகின்றது.




பெப்பரவரி 14ம் திகதி இளைய நெஞ்சங்களுக்கு மறக்க முடியாத நாள், உலகெங்கும் காதலர்கள் ஒருவர் ஒருவருக்கு வாழ்த்துக்கள் கூறி தங்கள் அன்பை வெளிப்படுத்தும், ஒரு பொன்னாள். அது எவ்வளவு பிரபலமாகி விட்டது. என்றால் மாநகரங்களிலும், புறநகர்களிலும் "வலனரைன் டே"எனறு அந்த நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். ஏன் எமது நாட்டின் தொலைக்காட்சி கூட இதற்கு முக்கியத்துவம் கொடுத்து பல நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்றதை நாம் காணலாம். காதலர் தினம் அல்லது "வலன்ரைன் டே" என்ற பெயர் வரக்காரணம் என்ன? 1700ஆம் அண்டில் இத்தாலி நாட்டில், சிறையில் இருந்த இளைஞர் வலன்ரைன் என்பவன் தன் காதலிக்கு தன் அன்பை வெளிப்படுத்த விரும்பினான். அவனுடைய அறையின் ஜன்னலில் அழகிய மென்மையான ஒரு செடியில் ஊதாப் பூக்கள் பூத்திருந்தன. அதன் இதய வடிவமுள்ள இலைகளில் I Love You என்று பொறித்தான். இது இடம்பெற்றது பெப்ரவரி 14ம் திகதி அன்று அவன் "இன்று நான் உன்னை நினைத்தேன்" என்று எழுதியது பின்னர் நாளடைவில் ஒரு பழக்கமாக பூக்கள் பரிமாறும் தினமாக, தம் அன்பைப் பொறித்துக் கொடுக்கும் தினமாக மாறி வருவதோடு வாழ்த்து மடல்கள், பரிசுப் பொருட்கள் என்று பலவித கோணங்களில் இத்தினம் கொண்டாடப்பட்டு வருவதை நாம் காணலாம்.

இளைஞர், யுவதிகள் தங்கள் அன்பை பலவிதமாக வெளிப்படுத்த விரும்புகிறார்கள். பெற்றோருக்கும், நண்பர்களுக்கும் தெரியாமல் காதல் கடிதங்கள் அனுப்புகிறார்கள், காதல் தூது விடுகிறார்கள், பஸ் நிற்குமிடங்களில் பாடசாலை முடிந்தவுடன், அலுவலகங்களில் அலுவல்கள் முடிந்தவுடன் மணிக்கணக்காகத் தவம் இருக்கின்றார்கள். இவை எல்லாம் உண்மை அன்பை வெளிப்படுத்துகின்றதா? இவை இவர்களின் காதலை வெளிப்படுத்துவதைவிட அவர்களது ஆழமற்ற நிலையற்ற, தத்தளிக்கும் உறவைப் படம் பிடித்துக் காட்டுவது போலப்படுகின்றது.

I Love You என்று அவர்கள் பாறைகளிலும், பொது இடங்களிலும், ஏன் தம் கையில் காலில், தொடையில் எழுதுவது, எங்கே அவர்களின் நிலையற்ற தன்மை அப்பட்டமாகி விடுமோ என்று பயந்து, பொது இடங்களில் எழுதி தங்களின் காதலை நிரந்தரமாக்கி விட்டோம் என்று தங்களையே ஏமாற்றிக் கொள்வது போலப்படுகின்றது.

மனித அன்பு பாரபட்சமானது நிபந்தனையுடையது இதற்குக் காரணம் அன்பை நாம் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதுதான் "கண்மணி அன்போடு நான் அனுப்பும் SMS பொன்மணி உன் செல்லில் காசு இருக்குதா? என் செல்லில் காசு இல்லை. உன்னை நினைக்கையில் SMS கொட்டுது. அதை அனுப்ப நினைக்கையில் Billing ஏறுது. மனிதர் உணர்ந்து கொள்ள இது மனிதக் காதல் அல்ல. அதையும் தாண்டி புனிதமானது" இவ்வாறு எல்லாம் பாடக் காரணம் என்ன? அன்பு என்று ஆசையோடு தழுவியது எல்லாம் அற்பம் என்று நம்மைத் தள்ளுகின்றது. கற்கண்டு என்று நினைத்து வாயில் போட்டது எல்லாம் கசந்தவுடன் வெறும் கல் என்று உணர்வதுபோல, அன்பு என்று நினைத்தது வெறும் கவர்ச்சி என்று புரிகின்றது. அன்பு முத்தம் என்று நான் ஏற்றுக் கொண்டது. வெறும் காமஇச்சை என்று உணரும்பொழுது மனம் அங்கலாய்க்கின்றது. அன்பில் என்னையே உனக்குத் தருகின்றேன் என்று நினைத்து என்னுடைய தனித்தன்மையை இழந்து விட்டேனே என்கிறபோது உளம் நடுங்குகின்றது. எனவே அன்பு என்று நாம் தவறாகப் புரிந்து கொள்ளும் சில உறவுகளைப் பற்றி அடுத்த இதழில் அறிந்து கொள்வோம்.



அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்

தொடரும்....

## அன்பியமாய் வாழ்வோம், பகிர்வோம்

அன்புச் சீடரின் மத்தியிலே மலர்ந்த
அன்புக் குழுமத்தை அழகுற வடிவமைத்த
இயேசுவின் பாத அடிச்சுவட்டில் – நாம்
கரம் பிடித்தே பயணிப்போம் அன்பிய வாழ்விலையே

இறையாட்சியை மலரச் செய்வதன் நோக்கமும்
தொலைத்தூர இலட்சியமும் அன்பியமே
உடனடி இலட்சியம் பங்கேற்பு திருஅவையே
மீட்பின் சாதனமாம் அன்பியமே

உயிர்த்த இயேசுவின் பிரசன்னத்தில்
செப வாழ்வுடன் சமூகப்பணியும் இரண்டறக்
கலந்திடும் தெய்வீகக் குழுமமாம்
கிறிஸ்தவர்களின் பயிற்சித்தளமும் அன்பியமே

இறை வார்த்தையைச் சொல்லாலும், செயலாலும்
நிஜமாக்கிடும் மன்றமும் அன்பியமே
நிறை வாழ்வு நோக்கி, இறை ஆவியினால்
அடிமட்ட உறவையும், விசுவாச வாழ்வையும்
உருவாக்கிடும் சாதனமும் அன்பியமே

கொரோனாவின் கோரப் பிடியினால்
தனிமைப்படுத்தப்பட்டு ஊனமுற்ற
உள்ளத்தின் அவலத்தை உணர்ந்து
உதவிக்கரம் நீட்டத் துடித்திடும்
அன்புக் கலாசார சமூகமும் அன்பியமே

திருமதி. K. ஜசிந்தா
ஓய்வுநிலை ஆசிரியர் ஆலோசகர்
குவாடலூப்பே

"என்னிடம் இருந்து எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளுங்கள் நான் வெற்றி அடைய, என் நம்பிக்கை மட்டும் எனக்குப் போதும்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற மாத தொடர்ச்சி...

# நல்ல சமாரித்தனும் நமக்கான செய்திகளும்

A.S.K அற்புத அன்ரன் ராஜ்
மூதூர்

நல்லசமாரியன் உவமையில் சமாரியன் செய்யும் 7 நற்காரியங்களை நாங்கள் பார்க்கவேண்டியுள்ளது.

01. பயணம் செய்துகொண்டிருந்த சமாரியர் ஒருவர் அருகில் வந்தார்.
02. அவரைக் கண்டபோது அவர்மீது பரிவு கொண்டார்.
03. விழுந்துகிடந்தவரை அணுகினார்.
04. காயங்களை திராட்சை இரசமும் எண்ணெய்யும் வார்த்து அவற்றைக் கட்டினார்.
05. தான் பயணம்செய்த விலங்கின் மேல் காயமுற்றவரை ஏற்றினார்.
06. ஒரு சாவடிக்குக் கொண்டுபோய் அவரைக் கவனித்துக் கொண்டார்.
07. மறுநாள் இரு நாணயத்தை எடுத்து சாவடிப் பொறுப்பாளரிடம் கொடுத்து "இவரைக் கவனித்துக்கொள்ளும். இதற்கு மேல் செலவானால் நான் திரும்பி வரும்போது உமக்குத் தருவேன்" என்று மருத்துவ, பொருளாதார மற்றும் உடல், உள ரீதியாக உதவி செய்கிறார்.



பரிவு அன்பு என்பனவேயன்றி ஒருவனது சட்ட அறிவோ பதவியோ நிலைபேறுடைய வாழ்வை அளிக்காது என்பது முக்கியமானதாகும். இங்கு சமய குருவும் லேவியரும் மனதிற்குள் கேட்டுக்கொண்ட முதல் கேள்வி நான் இந்த காயப்பட்ட மனிதனுக்கு உதவிசெய்ய முயன்றால் எனக்கு என்ன நடக்கும்? என்பதாக இருக்கலாம். ஆனால் இங்கு நல்ல சமாரியன் தன் மனதிற்குள் கேட்டுக்கொண்டது நான் இந்த காயப்பட்ட மனிதனுக்கு உதவி செய்ய முன்வரவில்லையென்றால் அக்காயப்பட்டு குற்றுயிராய்க்கிடப்பவனுக்கு என்ன நடக்கும்? என்பதாகத் தான் நிச்சயமாக இருக்கும். யூதர் சமாரியரை தாழ்ந்த இனமாக அக்காலத்தில் நடத்தினர். இங்கு இயேசு சமாரியனை எடுத்துக்காட்டாக பயன்படுத்தியது எல்லோரும் சமன் என்ற கருத்தையும் வலியுறுத்துகின்றது.

சமாரியா என்பது முன்னர் இஸ்ரேலின் வடக்கு இராச்சியத்தின் தலைநகரமாக இருந்தது, இயேசுவின் காலத்தில் சமாரியா வடக்கே கலிலேயாவிற்கும் தெற்கே யூதேயாவிற்கும் இடையில் அமைந்திருந்தது. தற்போதைய இக்காலத்தில் சமாரியா என்பது மேற்குக் கரையின் வடக்கே (Northern West Bank) உள்ளது. பல நூறு சமாரியர்கள் இன்னமும் இஸ்ரேலில் வாழ்கின்றார்கள்.

பரிசேயர்கள், மறைநூல் அறிஞர்கள் மற்றும் ஆயக்காரர்கள் எல்லோரும் இயேசுக்கிறிஸ்துவிடம் பிழை கண்டுபிடிக்கவும் அவரை மாட்டி விடவும் மற்றவர்களிடம் பிழைகண்டுபிடித்து அதற்கு இயேசுவினூடாக தீர்ப்புக்கேட்டு கோர்த்துவிட்டார்கள். அப்படியான பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இயேசு கூறிய பதில்களும் அவர் கொடுத்த அதற்கான பிரதிபலிப்புக்களும் மெய்சிலிர்க்க வைப்பவை அவற்றில் முக்கியமானவை. விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை மறைநூலறிஞரும் பரிசேயரும் கொணர்ந்து மோசேயின் கல்லால் எறிந்து கொல்லும் கடுமையான நீதிச்சட்டத்தை மேற்கோள் காட்டி இயேசுவினூடாக தீர்ப்பிட முயன்றபோது இயேசு கூறிய வசனம் உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும் (யோவான் 8:7) என்று சாதாரணமாக ஆனால் சாமர்த்தியமாக பதிலளித்தார். மத்தேயு வீட்டில் இயேசு விருந்து அருந்தச்சென்றபோது இதைப்பார்த்த பரிசேயர்கள் உங்கள் போதகர் வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து உண்பது ஏன் எனக்கேள்வி எழுப்ப இயேசு அழகாக நோயற்றவர்களுக்கு அல்ல நோயுற்றவர்களுக்கே மருத்துவர் தேவை. பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகின்றேன். என்பதன் கருத்தை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள் ஏனெனில் நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்கவந்தேன் என பதிலளிக்கின்றார். (மத்தேயு 9:12 - 13) மற்றவர்களுக்கு தீர்ப்பளிப்பதைப்பற்றி சொல்லும் போது வெளிவேடக்காரரே முதலில் உங்கள் கண்ணிலிருந்து மரக்கட்டையை எடுத்தெறியுங்கள். அதன்பின் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணிலிருந்து துரும்பை எடுக்க உங்களுக்கு தெளிவாய்க் கண் தெரியும் என்றார். (மத்தேயு 7:5) இங்கு அவர் உங்கள் சகோதரர் கண்ணிலிருந்து துரும்பை எடுக்க உங்களுக்கு தெளிவாய்க் கண் தெரியும் என்கிறார். அதாவது மற்றவர்களின் பிழைகளை நாங்கள் மன்னிக்கும் போது அல்லது அதை பெரிது படுத்தாத போது எங்கள் ஞானக்கண்கள் திறக்கின்றன. என்பதே இதனர்த்தம். அன்பின் பாதைகள் விசாலமாகின்றன.

தொடரும்...

## மரணப்பயத்தை நீக்குவோம் நித்திய வாழ்வுக்கு தயாராகுவோம்.


கிறிஸ்தவ மறையின் படி மரணம் பாவத்தின் விளைவு ஆகும். "நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்குத் திரும்பும் வரை" (தொடக்க நூல் 3:19) என்று இறைவன் பாவத்தில் வீழ்ந்து போன ஆதாமுக்கு சாபம் கொடுப்பதனையும், "பாவமே சாவின் கொடுக்கு (1கொரி 15:56) என்று புனித பவுல் கொரிந்திய சபைக்கு உரைப்பதையும் காண முடிகிறது. பிறந்தவர் அனைவரும் இறப்பது என்பது உலகின் நியதி என்றாலும் பாவத்தின் சம்பளமாகிய மரணம் நம்மை எப்பொழுது சந்திக்கும் என்று தெரியாது. பிறந்து ஒரு சில நிமிடங்களும், சிலருக்கு சில வருடங்களும், பலருக்கு பல வருடங்களும், சிலருக்கு நீண்ட ஒரு நூற்றாண்டாகவும், சில உயிருக்கு கருவறை கல்லறையாகவும் இருக்கின்றது. எனினும் கடவுளின் திட்டம் சித்தப்படி எந்த வயதினருக்கும் எந்தக் கணப்பொழுதிலும் மரணம் ஏற்படலாம்.

பிறப்பு - வாழ்வு - இறப்பு இவை மனித வாழ்வில் நிச்சயப்படுத்தப்பட்ட ஒவ்வொரு கட்டங்கள் ஆகும். இதன் இறுதிக் கட்டமான இறப்பு அனைவருக்கம் தீவிர பயத்தையும், அருமையானவர்களை விட்டு பிரிந்து போய் விடுவோமே என்ற பயத்தையும், அருமையானவர்களை விட்டு பிரிந்து போய் விடுவோமே என்ற துயரத்தையும், இறப்பக்கு பின் என்ன சம்பவிக்கும் என்ற அச்சத்தையும் சேர்த்து வைத்த சொத்துக்களை சுகங்களை, உறவுகளை எப்படி விட்டுச் செல்வது என்ற கலக்கத்தையும் எம்மில் அநேகருக்கு ஏற்படுத்துகின்றது.

இறக்கப்போகும் தருவாயில் ஒருவர் தனது உறவினர்கள் நண்பர்கள் ஏனையவர்களிடம் இருந்து விடை பெற பொருத்தமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். "கொன்றழிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார்" (திபா 91:3) "நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத் 11:28) "இறுதி வரை வழி நடத்துவார்" (திபா 48:14) போன்ற ஆறுதல் தரும் விவிலிய வார்த்தைகளையும் வேறு பல விவிலிய வாசகங்களையும் அடிக்கடி உரைப்பதன் மூலம் அவர்கள் பயத்தை போக்கி இறைபணிக்குள் அவர்களை ஐக்கியப்படுத்த வேண்டும்.

மேலும் மரணப்படுக்கையில் இருப்பவர்களின் சூழல் அமைதியாவும், சுத்தமாகவும் நல்ல நறுமணங்கள் கமழும் இடமாவும், இதமூட்டும் அழகுச் சூழலாகவும் அமைத்தல் நன்று உறவினர் சூழ்நின்றால் மிகவும் நன்றாக இருக்கம். மடியில் வைத்து தொடுகை உணர்வுகள் மூலம் அன்பைப் பகிர்தல் அவற்றை அமைதிப்படுத்தல் போன்ற செயல்களினால் இறப்பவர்களை எந்தவிதமான பயமும் இன்றி ஆறுதலாக தமது இறுதி மூச்சை விடுவார்கள். எமக்கும் நன்றாக பார்த்துக்கொண்டோம் என்ற மன ஆறுதலும் இறந்தவரைக் குறித்து எந்தவிதமான குற்ற உணர்வு அற்றவர்களாகவும் இருப்போம்.

"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு. அது மனிதக் கையால கட்டப்படாதது, நிலையானது" (2கொரி 5:1) அங்கு அழுகையில்லை, துன்பமில்லை ஆனந்தப்பெருக்கு நிலைத்திருக்கும். அத்தகைய வாழ்வு எம்மவருக்கு எப்போதும் வரும். எனவே! நாம் அதற்கு ஆயத்தப்பட வேண்டும். "சத்திய பரலோக தந்தையே இறைவா! உமது கரங்களில் என் ஆவியை ஒப்புக் கொடுக்கின்றேன் என்று யூதர்கள் இரவில் படுக்கும் முன்பு செபிப்பது போல நாமும் செபிப்போம் மரணப்பயத்தை நீக்குவோம் நித்திய வாழ்வுக்கு தயாராகுவோம்.




அ. ஜெயநாயகம் நோயல் டானியல்
உவர்மலை,
திருகோணமலை

"வெற்றி கிடைக்குமோ என்ற அச்சம் கண்டிப்பாக, தோல்வியை நோக்கியே கொண்டு செல்லும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றை ஆக்கியோர் – 01

துணிவுக்கும், வீரத்திற்கும் வரலாற்றில் ஒரு பெயர் தான் நெப்போலியன் போனபார்ட். இவர் 1769இல் இத்தாலியில் ஜயாட்சோ என்ற சிறிய கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை சார்லஸ் போனபார்ட் ஒரு சட்ட நியுணர் தாயார் லெட்டீஷியா சமோசினோ உறுதியான உள்ளமும் செயல் திறனும் மிக்கவர். நெப்போலியன் அரசின் சலுகை பெற்று வியன்னாவலும், பாரிஸிலும் உள்ள இராணுவப்பள்ளியில் கல்வி பயின்றார். கணிதம், வரலாறு, புவியியல் ஆகிய துறைகளில் அதிக அக்கறை காட்டினார். தனிமையை விரும்புகிற சுபாவம், பொறுப்புணர்ச்சி, நெஞ்சில் உரம் என்ற குண இயல்போடு வளர்ந்தான். 6 வயதில் பள்ளிப் படிப்பை முடித்த நெப்போலியன் பிரஞ்சு துப்பாக்கிப் படைப்பிரிவில் சிறிய பதவியில் சேர்ந்தான். இச்சமயத்தில் ரூஸோ, வால்டேரின் கருத்துக்கள் இவரை மிகவும் கவர்ந்தது. நெப்போலியன் தனது ஓய்வு நேரத்தை படிப்பதிலும், கட்டுரை, புதினம் எழுதுவதிலும் செலவிட்டார். ஒரு நாளைக்கு நான்கு மணிநேரம் மட்டும் உறங்கிய நெப்போலியன் ஆழ்ந்த வாசிக்கிற பழக்கம் உள்ளவன். வாசிப்பே நம்மை பக்குவப்படுத்தும் என்பது அவன் எண்ணம்.



நெப்போலியன் புகழ்பெற்ற அலெக்ஸாண்ட்ரியா நகரைக் கைப்பற்றினான். பிரமிடுகள் போர் என அழைக்கப்படும் போரில் கெய்ரோவை கைப்பற்றினான். பலவித முயற்சிகள் காரணமாக 1792ல் பார்போன் அரசனைத் தூக்கி எறிந்து நெப்போலியன் பிரான்ஸ் அதிபராக மாறினான். புரட்சிகள் மூலம் பிரான்ஸ் அதிபராகவே ஆகிவிட்ட இளம் வீரன் நெப்போலியன் மிகச் சிறந்த வீரர். துணிவானவர், நல்ல முடிவு எடுக்கும் ஆற்றல் மிக்கவர், நீண்ட நேரம் உழைப்பவர், ஓய்வை அறியாதவர்.

அவர் வாழ்ந்த காலத்தின் வரலாற்று நாயகன் நெப்போலியனே. நெப்போலியன் ஒரு முறை "நானே புரட்சி" என்றும் மறுமுறை "நான் புரட்சியை அழித்தவன்" என்றும் கூறினான். ஆட்சியில் திறமைக்கு வாய்ப்புத் தந்தான் சட்டத்தின் முன் அனைவரும் சமம் ஆக்கினான். சமத்துவம் என்பதை ஏற்ற நெப்போலியன் 'சுதந்திரம்' என்பதை ஆதரிக்கவில்லை எல்லா அதிகாரமும் அவனிடமே இருந்தது. பேச்சுரிமை, எழுத்துரிமை அவனால் நசுக்கப்பட்டது. வேலைவாய்ப்புக்களைப் பெருக்கினான். பாரிசில் பல நகர சீரமைப்புத் திட்டங்களை நிறைவேற்றினான். ஜரோப்பாவின் அழகுமிக்க நகராக பாரிஸ் விளங்கிட ஆசைப்பட்டான்.



## துணிவுக்கு ஒரு நெப்போலியன்

இதற்காகவே அவன் இத்தாலியின் கலைச் செல்வங்களை சூறையாடினான். இவர் செய்த இரண்டு முக்கிய செயல், போப்பாண்டவருடன் செய்து கொண்ட சமய உடன்பாடு, நீதித்துறைக்குப் பயன்படும் நல்ல ஒரு சட்டத் தொகுப்பைக் கொண்டுவந்தது. 1804ல் பிரான்ஸ் மக்களின் பேரரசன் ஆனான். "பிரான்சின் அரசமுடி வீழ்ந்து கிடந்ததைக் கண்டேன் என் வாளால் அதை எடுத்துக் கொண்டேன்" என்றான். போர்க்களத்தில் தொடர்ந்து வென்று கொண்டிருந்த நெப்போலியனின் சொந்த வாழ்க்கை வெகு சிக்கனமானது. 1810ம் ஆண்டு ஆஸ்திரிய இளவரசி மரியலூயிசாவைத் திருமணம் செய்து கொண்ட நெப்போலியன் பல வெற்றிகளைக் கண்டான். 1813ல் மாபெரும் தோல்வியைச் சந்தித்தான். 1821ல் தனது 52ஆம் வயதில் வயிற்றில் புற்றுநோய் கண்ட இந்த மாவீரன் மரணம் அடைந்தான். 20ஆண்டுகளுக்குப் பிறகு இவன் உடல் சீன் நதிக்கரையில் புதைக்கப்பட்டது.

## இன்னுமா தயக்கம் - 20

# நண்பனின் கைக்கடிகாரம்



இந்த உலகில் பரவலாகக் கூறப்படுகின்ற வாசகம், "நல்லதுக்கே காலமில்லை, தீயவர்கள், நல்லவர்களுக்குக் கிடைக்கக் கூடிய அனைத்து மரியாதைகளையும் நன்மைகளையும் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் நல்லவர்கள் தீமையையே அனுபவிக்கின்றார்கள்!" என்பது. ஆனால் இது உண்மை தானா, என்ற கேள்வி நம் மனதில் எழாமல் இல்லை. ஆனாலும் இந்தக் கூற்றை நாம் உண்மை என்றே நம்பிக் கொண்டிருக்கின்றோம். உண்மையில் இது ஒரு மாயை, மகிழ்ச்சி என்பது எதில் உள்ளது என்றால் நன்மையில் தான் உள்ளது.

நம்மைச் சுற்றியுள்ள மக்களை அன்பு செய்தால் அது மகிழ்ச்சி, நம்மைச் சுற்றியுள்ளோரிடம் கோபப்பட்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தால் அது துன்பம்.

நண்பர்களாக வாழ்ந்த அருணும் ஆரோக்கிய சாமியும் ஒருநாள் தாங்கள் ஒன்றாக வேலை செய்யும் அலுவலகத்தில் சண்டையிட்டுக் கொண்டார்கள். அவர்களில் அருண் ஆரோக்கியசாமியை தன் வாயில் வந்த வார்த்தைகளையெல்லாம் பயன்படுத்தி வசைமாரி பொழிந்துவிட்டான். இருந்தாலும் அவரது கோபம் தீரவில்லை. அவர் வீட்டிற்குச் சென்றவுடன் தன் கையில் கட்டியிருந்த கைக்கடிகாரம் தன் நண்பனான ஆரோக்கியசாமி கொடுத்தது என்பதைக் கண்டார். உடனடியாக அதைத் திருப்பிக்கொடுத்து விட வேண்டும் என்று ஆரோக்கியசாமியின் வீட்டிற்கு விரைந்து வந்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அருணின் மனைவி, "இன்று என்ன நடக்கப்போகிறதோ?" என்று பதட்டத்துடன் காத்துக் கொண்டிருந்தாள். அரை மணிநேரம், ஒரு மணிநேரம், இரண்டு மணிநேரம் என்று நேரம் போய்க் கொண்டிருக்கின்றது. ஆனால் அருண் திரும்பி வரக் காணவில்லை. என்னவாயிற்றோ, ஏதாயிற்றோ என்று பயந்தவாறு அருணின் மனைவி ஆரோக்கியசாமியின் வீட்டிற்கு தயங்கித் தயங்கி வருகிறாள். ஆரோக்கியசாமியின் வீட்டிலிருந்து சிரிப்பு சப்தம் வீதி வரை கேட்டுக் கொண்டிருக்க, அவள் குழம்பியவளாய் வீட்டுக்குள் செல்ல, வீட்டிலிருந்து ஆரோக்கியசாமியின் தோள் மேல் கை போட்டு சிரித்துக் கொண்டே அருண் வருகிறார். திரும்பிக் கொடுத்துவிடவேண்டும் என்று கொண்டுவந்த கைக்கடிகாரம் இன்னும் அவரது மணிக்கட்டை அலங்கரித்துக் கொண்டு தான் இருந்தது. இதைப் பார்த்த அவரது மனைவிக்கு இன்னும் குழப்பம் இருவரும் வீட்டுக்கு வருகின்றனர் வீடடில், தன் நண்பன் கொடுத்த கைக்கடிகாரத்தை மிகவும் பத்திரமாக அலமாரியில் வைத்துவிட்டு அருண், நடந்த நிகழ்வை விளக்குகிறான்.

அருண், கோபமாக ஆரோக்கியசாமியின் வீட்டு வாயிலில் வரும்போத ஆரோக்கியசாமியின் மனைவி அவரைப் பார்த்துவிட்டு விரைந்து வந்து கதவைத் திறந்து விடுகிறாள். "வாங்க அண்ணன்! நீங்கள் இங்க வந்தது, மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது!" என்று ஒரு அழகிய புன்சிரிப்புடன் வரவேற்கின்றாள். ஆனால் அருண் உள்ளே வர விரும்பமில்லாமல் வீட்டின் வெளியே நின்றுகொண்டு ஆரோக்கியசாமி எங்கே என்று விசாரிக்க, "அவர் குளித்துக் கொண்டிருக்கின்றார். வீட்டுக்கு உள்ளே வாருங்கள். அவர் குளித்துவிட்டு வந்துவிடுவார்." என்று அவரது கையைப் பிடித்து அழைத்து வந்து அமர வைக்கிறாள். அவரிடம், இதமான குரலில், "என்ன அண்ணன், நீங்கள் கோபமாக இருப்பதைப் போல் இருக்கின்றது. அலுவலகத்தில் ஏதாவது பிரச்சனையா, என்ன நடந்தது?" என்று ஆதரவாக கேட்க, அந்த புன்சிரிப்பு நிறைந்த முகத்தைப் பார்த்ததும், அருணால் இன்னும் கோபத்தை தன் முகத்தில் கொண்டிருக்க முடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக கோபத்தை தவிர்த்துவிட்டு அவரும் புன்சிரிப்பினை தன் முகத்தில் அணிந்து கொண்டு நண்பன் கொடுத்த கைக்கடிகாரத்தை கை மணிக்கட்டில் அணிந்து கொள்ள, நிலைமை சகஜமாக மாறுகின்றது. அதன் பின் ஆரோக்கியசாமி குளித்துவிட்டு வர, இரண்டு நண்பர்களுக்கு இடையே உறவுக் கொண்டாட்டம் ஆரம்பிக்கின்றது. அனைவரும் மகிழ்ச்சியாக சிரித்துக் கொண்டே உரையாட ஆரம்பிக்கின்றனர்.

இந்த நிகழ்வைக் கேட்ட அருணின் மனைவி, "அப்படி அந்த புன்சிரிப்பில் என்ன இருக்கின்றது?" என்று குழம்பினாள். ஒவ்வொரு சிரிப்பிற்கும் ஒரு அர்த்தம் இருக்கின்றது. ஆனால், ஆரோக்கியசாமியின் வீட்டில் அவர் கண்ட புன்சிரிப்பில், "நான் உங்களை மதிக்கின்றேன், அன்பு செய்கின்றேன், உங்களை எனக்கு மிகவும் பிடிக்கும்!" என்ற செய்தியை பெற்றுக் கொண்டதாக அருண் கூற, ஒரு சிறிய சிரிப்பில் இத்தனை அர்த்தங்கள் இருக்கின்றனவா? என்று அவர் மனைவி அதிசயித்தாள்.



அன்பார்ந்தவர்களே, முகத்தில் தோன்றும் ஒரு அழகான புன்சிரிப்பு, பல மனக்காயங்களை ஆற்றிவிட போதுமானதாக இருக்கின்றது. அதற்குக் காரணம், மிகவும் அழகாகவும் ஆழமாகவும் அந்த புன்னகையில் ஒளிந்திருக்கும் செய்தி, "உன்னை நான் அன்பு செய்கிறேன்! உன்னை நான் மதிக்கிறேன்!" என்பது தான், இந்த செய்தியைப் பெற்ற பின், எந்த ஒரு மனிதனும் தன் கோபத்தை இன்னும் காட்ட வேண்டும் என்று வைத்திருப்பதில்லை. மாறாக இந்த செய்தி கிடைத்தவுடனேயே அவனது கோபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடுகின்றது.

அதனால் தான் ஆண்டவர் இயேசு நமக்கெல்லாம் முதன்மையான கட்டளையாக "அன்பு செய்யுங்கள்!" என்று பணிக்கின்றார். ஏனென்றால், அன்பே இந்த உலகில் மிகவும் சக்தி வாய்ந்தது, மிகவும் உயர்ந்தது.

நாமும் ஒருவர் மற்றவரை அன்பு செய்வோம். அந்த மகிழ்வைப் பெற்றுக் கொள்வோம்.

அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா க.ச

"நாம் நமது தேவைகளை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்கிறோமே தவிர, நமது திறன்களைப் பற்றி ஒரு போதும் சிந்திப்பதில்லை"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புனித மாற்கு நற்செய்தி 8 – 12 அதிகாரம்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- பரிசுகள் முறையே 1ம் பரிசு 500/= 2ம் பரிசு 300/= 3ம் பரிசு 200/=

**கேள்வி பதில்**

1. இயேசு கற்பித்துக் கொண்டிருக்கும் போது யாரைக் குறித்து கவனமாயிருங்கள் என்றார்?

.....................................................................................

2. ஒலிவமலை அருகிலுள்ள ஊர்கள் எவை?

.....................................................................................

3. இயேசு யாரிடம் ஊரில் நுழைய வேண்டாம் என்று கூறி அனுப்பினார்?

.....................................................................................

4. “சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள்” ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது. எப்படிப்பட்ட நிலையில் யார்? யாருக்கு கூறியது?

.....................................................................................

5. இயேசு யாருக்கு முன்பாக தோற்றம் மாறினார்?

.....................................................................................

**சரி, பிழை எழுதுக.**

6. வயிறார உண்டபின் மீதியாய் இருந்த துண்டுகளை ஐந்து கூடையில் நிறைய எடுத்தனர். ( )
7. நம்புகிறவனுக்கு எல்லாம் நிகழும் என்பது தீயஆவி பிடித்த சிறுவனின் தந்தைக்கு கூறியதாகும். ( )
8. செல்வர் இறையாட்சிக்கு உட்படுவது மிகவும் கடினம் என்று இயேசு சீடர்களிடம் கூறினார். ( )
9. காலை வேளை ஆனதும் இயேசுவும் சீடர்களும் நகரத்திலிருந்து வெளியேறினார்கள். ( )
10. ஏழைக் கைம்பெண் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டுவிட்டார். ( )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. நான் ________ என ஏன் சொல்கிறீர்? ________ ஒருவரைத் தவிர ________ எவருமில்லையே.

12. ________ புறக்கணித்த ________ கட்டடத்துக்கு ________ ஆயிற்று

13. ஒருவர் ________ முழுவதையும் ________ கொண்டாலும் ________, ________ தம் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?

14. என் இல்லம் ________ அனைத்திற்கும் உரிய ________ வீடு என ________.

15. நீங்கள் ________ தன்மை கொண்டிருங்கள் ________ ஒருவர் ________ வாழுங்கள்.

பெயர் :..........................................................

முகவரி:..........................................................

பங்கு :..........................................................

முடிவுத்திகதி 31.12.2021

## ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர் போட்டி – 47 திருப்பாடல் 1 – 30

1. கடவுளின் மாட்சி எப்படி எங்கெல்லாம் உயர்ந்துள்ளது?

விடை ..........................................................

2. நிலவுலகும் அதில் வாழும் யாவும் யாருக்கு சொந்தம்?

விடை ..........................................................

3. கடவுள் இல்லை என்று யார் தம் உள்ளத்தில் சொல்லிக் கொள்கின்றார்கள்?

விடை ..........................................................

4. ஆண்டவரின் குரல் ________ முறிக்கின்றது.

5. ஆண்டவரின் அரியணை எங்கு இருக்கின்றது?

விடை ..........................................................

6. சினமுற்றாலும் ________ செய்யாதிருங்கள்.

7. பொல்லார் எதனால் எளியோரைக் கொடுமைப்படுத்துகின்றனர்?

விடை ..........................................................

8. ஆண்டவரே ________ என் குரலைக் கேட்டருளும் ________ உமக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கின்றேன்.

9. கடவுள் யாரைக் கைவிடுவதில்லை?

விடை ..........................................................

10. விடுதலை அளிப்பவர் ஆண்டவர் அவர் தம் மக்களுக்கு எதை வழங்குவார்?

விடை ..........................................................

11. ஆண்டவரின் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர் யார்?

விடை ..........................................................

12. ஆண்டவர் எப்படி கீழிறங்கினார் என்று திருப்பாடகர் கூறுகிறார்?

விடை ..........................................................

13. நீர் என் புலம்பலைக் ________ மாற்றிவிட்டீர்?

14. ஆண்டவர் தம் மக்களை எங்கு இளைப்பாறச் செய்கிறார்?

விடை ..........................................................

15. ஆண்டவர் யாருக்கு தாம் தேர்ந்துகொள்ளும் வழியை அவர் கற்பிப்பார்?

விடை ..........................................................

பெயர் :..........................................................

முகவரி:..........................................................

பங்கு :..........................................................

முடிவுத்திகதி 31.12.2021

**“இழந்த இடத்தைப் பிடித்துக்கொள்ளலாம் இழந்த காலத்தை ஒரு போதும் பிடிக்க முடியாது”**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 06 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்





- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01ற்கு மாத்திரம் நிறந்தீட்டி படம் 02 வித்தியாசங்களைக் கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

பெயர் :........................................

முகவரி :........................................

தரம் :........................................

பங்கு :........................................

1ம் பரிசு - 500/- 2ம் பரிசு - 300/- 3ம் பரிசு - 200/-

முடிவுத்திகதி 31.12.2021

## விடுபட்ட எழுத்துப் புதிர்ப்போட்டி – 38 (முடிவுகள்)

**போட்டியில் கலந்து கொண்டோர் - 11**
**சரியான விடையளித்தோர் - 10**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம | ன | ச் | சா | ன் | று | ட | ன் | | வெ |
| | தீ | ல் | யி | ணி | ப | ப் | ரு | தி | ளி |
| ர் | ர் | ள | றா | ன் | சா | து | வீ | தா | வே |
| தா | மா | | ள் | க | றை | மு | தி | வி | ட |
| ய் | ன | று | ற் | ப | ப் | றை | இ | | ம |
| செ | த் | அ | ரு | ள் | கொ | டை | | | ற் |
| ச் | தி | ஆ | ட் | சி | செ | ய் | வோ | ம் | ற |
| ர | ன் | | வை | ழ் | வா | யா | ழி | அ | |
| ளி | ப | | | நி | றை | வ | டை | யு | ம் |
| ஒ | டி | | ரை | வ | ள் | நா | தி | று | இ |

### பரிசுக்குரியவர்கள்



1ம் பரிசு 500/= ரூபா
இ. ஜெசானியா
பேராலயம்

2ம் பரிசு 300/= ரூபா
R. பிறீட்டி
பள்ளத்தோட்டம்



3ம் பரிசு 200/= ரூபா
D. இவாஞ்ஜலின்
உவர்மலை

## எண் பழமொழியும், விவிலிய எண்களும்

போட்டி முடிவுகள்



பங்குபற்றியவர்கள் 04 பேர்
பரிசுத்தொகை நான்கு பேருக்கும் சமமாக பகிர்தளிக்கப்படுகின்றது

250/= ரூபா
D. இவாஞ்சலீன்
இல: 10/4, கண்ணகிபுரம்
உவர்மலை

250/= ரூபா
தேனுகி கிரிதரன்
இல: 70/33, யாட்அப்ரோச் வீதி
திருகோணமலை

250/= ரூபா
கர்ர்மலிற்றா விமலதாஸ்
இல: 31, இராஜவரோதயம் வீதி
திருகோணமலை

250/= ரூபா
ந. தோமஸ் மிராண்டா
இல: 31/1, அருணகிரி வீதி
திருகோணமலை

## புனித மாற்கு நற்செய்தி அதிகாரம் 1 – 2

போட்டி முடிவுகள்

பங்குபற்றியவர்கள் 15 பேர்
மிகச்சரியாக விடையளித்தோர் 04 பேர்
பரிசுத்தொகை நான்கு பேருக்கும் சமமாக பகிர்தளிக்கப்படுகின்றது


250/= ரூபா
ஜெசானியா இம்மானுவேல்
இல. 30, சுங்க வீதி
திருகோணமலை

250/= ரூபா
தேனுகி கிரிதரன்
இல: 70/33, யாட்அப்ரோச் வீதி
திருகோணமலை

250/= ரூபா
கர்ர்மலிற்றா விமலதாஸ்
இல: 31, இராஜவரோதயம் வீதி
திருகோணமலை

250/= ரூபா
D. இவாஞ்சலீன்
இல: 10/4, கண்ணகிபுரம்
உவர்மலை

## சிறுவர்களுக்கான போட்டி முடிவுகள்



பங்குபற்றியவர்கள் 05 சிறார்கள்
பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/= ரூபா
சி. லியோனி அனிட்டா
இல. 40/2, பிரதான வீதி
கப்பல்துறை

2ம் பரிசு 300/= ரூபா
வி. நிரிஷிகா
இல. 25/4, வேளாங்கண்ணி வீதி
பள்ளத்தோட்டம்

3ம் பரிசு 200/= ரூபா
செல்வி ஷத்விகா கேயுஜீகன்
பொற்கேணி
தம்பலகமம்

பங்குகொண்ட சிறார்களுக்கு வாழ்த்துக்களும் நன்றியும்

"நமது உடலுக்கு தேவைப்படும் சிறந்த சிகிச்சை, அமைதியான மனமே!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில் காலம்சென்ற ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலைப் பணியாளர்களின் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி

08.11.2021 அன்று மாலை 5 மணிக்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் புனித மரியாள் பேராலயத்தில் மறைமாவட்ட குருக்கள், துறவிகள், இறைமக்கள் இணைந்து மறைமாவட்டத்தில் இறைபணியாற்றி மரித்துப்போன ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலைப் பணியாளர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டி விசேட திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.









## 2022ம் ஆண்டிற்கான புதிய வரவுகள்

### திருமலை அருளகத்தில் (மறைக்கல்வி நிலையத்தில்) விற்பனைக்கு

**நாளாந்த வாசிப்பிற்கான திருவிவிலிய நாட்காட்டி 2022 (தமிழ்/சிங்களம்) விற்பனைக்கு உண்டு.**




**ஒன்றின் விலை ரூ.150.00**

**அருள்வாக்கு 2022ம் ஆண்டிற்கான விவிலிய நாட்காட்டி. வாசகங்கள் மற்றும் விளக்கவுரைகளுடன்**




தமிழ் – ரூபா 350.00
சிங்களம் – ரூபா 400.00
ஆங்கிலம் – ரூபா 400.00

## ஐந்தாவது கல்வி ஆண்டில் தடம் பதிக்கும் புனித ஜோசேவ்வாஸ் இறையியல் கல்லூரி

(கல்வி அனுசரணை - உரோமை, உர்பானியா பல்கலைக்கழகம்)

### 15.01.2022 புதிய கல்வி ஆண்டு ஆரம்பம்



**சிறப்பு நிகழ்வு:** எமது இறையியல் கல்லூரியில் டிப்ளோமா கற்கை நெறி மற்றும் டிப்ளோமா பரீட்சையினை சிறப்பாக பூர்த்தி செய்த பயிலுனர்களுக்கு (First Batch - 2018) "டிப்ளோமா சான்றிதழ்" வழங்கப்படும்.

புதிய பயிலுனர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:-
க.பொ.த. (உ/தரம்) பரீட்சைக்குத் தோற்றிய மாணவ மாணவியர் மற்றும் 40 வயதிற்குட்பட்ட ஆர்வமிக்க பொதுநிலையினர் விண்ணப்பிக்க முடியும்

விண்ணப்பப்படிவங்களை பங்குத்தந்தையரிடம் அல்லது ஆயர் இல்லத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி மற்றும் நேர்முகப் பரீட்சை பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

**'எமது இறையியல் கல்லூரியில் இணைந்து பயிற்சி பெறத் தகைமையுடையோரை வரவேற்கின்றோம்"**

தொடர்புகளுக்கு:
அருட்பணி J. ஜோர்ஜ் ஜீவராஜ், (0773138107)
இயக்குனர், ஜோசேப்வாஸ் இறையியல் கல்லூரி,
மட்டக்களப்பு.

## திருமறைக்கல்வி நிலைய நூலக மேம்படுத்தல் வேலைத்திட்டம்

எமது மறைக்கல்வி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்தை மேம்படுத்த நூல் நன்கொடையாளர்களை அன்போடு வரவேற்கின்றோம். கத்தோலிக்க மறை, விவிலியம், ஆன்மீகம் மற்றும் வரலாற்று நூல்களை (பழைய/ புதிய) எம் நூலகத்திற்கு வழங்க விரும்புவோர் மும்மொழியிலும் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) அவற்றை வழங்கலாம்.

தொடர்புகளுக்கு மறைக்கல்வி நிலையம், திருகோணமலை.

**வாசிப்பு எனும் நற்பழக்கத்தை எம்மவர் மத்தியில் வளர்க்க கரம்கோர்ப்போம்.**

BEN VISION PRINTERS 076 9000035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org